உ
சிவமயம்

ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள்

சரித்திரம்



(1856 – 1930)

ஆக்கியோன்
ராம. உ. இராமசாமிச் செட்டியார்



ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை - சிதம்பரம்
ஸ்தாபனம், மெய்கண்டான் ஆண்டு 700 (22.08.1923)



ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை - சிதம்பரம்
20.02.2021

உ
சிவமயம்
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்தச் செல்வராகிய

ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம்

மூன்றாம் பதிப்பு

இஃது
ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் மாணாக்கர்
காரைக்குடி
ராம.உ. இராமசாமிச் செட்டியார் அவர்களால் எழுதப்பெற்று

சிதம்பரம்
ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலைத்
தருமபரிபாலகர்களால்

காரைக்குடி
திருமகள் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது
சார்வரி – மாசி 8ம் தேதி
20.02.2021

கோவிலூரில் நடைபெற்ற
திருச்சி – தமிழகச் சைவநெறிக் கழகச்
சிவபூஜை மாநாட்டில் வெளியிடப் பெற்றது

முதற்பதிப்பு	:	1935ஆம் வருடம்	- 1000 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு	:	1964ஆம் வருடம்	- 1000 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு	:	2021ஆம் வருடம்	- 1000 பிரதிகள்

கோவிலூர் ஆதீனம் சீர் வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகளின்

ஆசியுரை

சைவ சித்தாந்தச் செல்வராகிய "தெய்வத்திரு. ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம்" என்ற நூலை மூன்றாம் பதிப்பாக வெளியிட உள்ளது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்; ஆசிர்வாதங்கள். இந்தத் தொண்டினை முன் எடுத்து நடத்தி வரும் அவருடைய வாரிசு தாரர்களுக்கு நம்முடைய பாராட்டுகள், ஆசிர்வாதங்கள்.

தெய்வத்திரு. ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் காரைக்குடியில் முத்தமிழும் சைவ சமயத்தின் சிறப்பையும் பல சீடர்களுக்குக் கற்பித்து உத்தமர்களையும் அறிஞர்களையும் உருவாக்கிய மகான் ஆவார்கள். இவர்களிடம் தமிழ் இலக்கிய இலக்கணம் கற்றுக் தெளிந்தவர்கள் அறிவுடையவர்களாகவும் மற்ற சீடர்களுக்குக் கற்பிக்கின்ற திறன் உடையவர்களாகவும் வளர்ந்தவர்கள், நிறைய இப்பகுதியில் இருந்தார்கள். ஆரம்பக் காலத்தில் அறுபத்து மூவர் மடத்தில் உபதேசம் செய்து வந்தார்கள். சைவ சமய வகுப்புகளுடன் சிவ தீட்சையும் பலருக்கு அளித்துச் சிறந்த பக்தர்களை உருவாக்கியவர் சொக்கலிங்க ஐயா அவர்கள்.

பின்னர், சிதம்பரத்தில் ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையைத் தொடங்கித் தன் இறுதிக் காலம் வரை தொடர்ந்து சைவமும் தமிழும் பரப்பிச் சிறப்பித்தார்கள். அந்த வித்தியாசாலையின் மூலம் நூற்றுக்கணக்கான மக்களைப் பக்தர்களாக உருவாக்கினார்கள். அவர்களுடைய வரலாறு இன்றைய இளைஞர்களுக்கும், சைவத்தையும் தமிழையும் போற்றுகின்ற மாணவர்களுக்கும் நல்ல விழிப்புணர்வையும், ஆராத தமிழ்ப்பற்றையும் சிவபக்தியையும் அருளும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூலைப் பதிப்பிக்கின்ற நல்ல உள்ளங்களுக்கு நம்முடைய பாராட்டுகள், ஆசிர்வாதங்கள். அவர்கள் குடும்பம் தழைத்து வளர்ந்து ஓங்கிச் சிறப்புற நம் குருமுதல்வர் கோவிலூர் ஆண்டவர் திருவடி சிந்தித்து வாழ்த்துகிறோம்.

ஸ்ரீ சற்குருநாதன் துணை

உ
சிவமயம்
தென்னாடு உடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

"காசி ஸ்ரீ", "திருத்தலச்செல்வர்", "திருவாசகமணி", "சித்தாந்த ரெத்தினம்"
Er. பழ.மாணிக்கம் B.E.,
முன்னாள் மேற்பார்வைப் பொறியாளர்,
தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை,
95, முதல் வீதி, யாழ்ப்பாணத்தார் வீடு, முத்துப்பட்டணம்,
காரைக்குடி – 630 001
அலைபேசி : 9444556931

அணிந்துரை

***"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"***

நள ஆண்டு, ஆடித் திங்கள் 23ம் தேதி ஆங்கில ஆண்டு 1856 ஆகஸ்ட் மாதம் 08ம் தேதி புகழோடு தோன்றிய சை சிந்தாந்தச் செல்வர், ஞான குரு, பெரும் தமிழ்ப் புலவர் திருப்பெருந்திரு சொக்கலிங்க ஐயா அவர்கள் அவதரித்த இல்லத்தில் வளவில் ஐயா அவர்களின் மூத்த சகோதரர் ராம.குமரப்ப செட்டியார் அவர்களின் கொள்ளுப் பேரனாகிய எனக்கு ஐயா அவர்களை நேரில் காணும் பாக்கியம் கிடைக்காமல் போயிற்று. எனினும் அவ்வில்லத்தில் பிறந்ததாலும், ஐயா அவர்களின் சிவ பக்தி பூசனை அலைகளாலும் ஈர்க்கப்பட்டு எனக்கு சிறிது தமிழ்ப் பற்றும் ஆன்மிக ஆர்வமும் ஏற்பட்டு சிவத் தொண்டு செய்து பயனடைந்து வருகிறேன். ஐயா அவர்கள் உயர்திரு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்களின் அன்பிற்குரிய சீடராய் இருந்து தமிழ்பாடம் கற்று கேட்டதன் பயனாய் பேச்சாற்றலும் கற்பிக்கும் ஆற்றலும் கவிதை இயற்றும் ஆற்றலும் பெற்று விளங்கினார்கள். சைசித்தாந்த கொள்கையின்படி இல்லறம் ஏற்று நல்லறம் புரிந்து இறைவனை ஈசனை வழுவாது, போற்றி சிவ பூசை செய்து சிறந்த பெரும்புலவராய் வீற்றிருந்து சைவமும், தமிழும் ஆன்மிகமும் தழைத்தோங்கச் செய்து தரணியில் புகழுடன் வாழ்ந்து

14.02.1930 சிவனடி சேர்ந்துள்ளார்கள், ஐயா அவர்களின் சரித்திர நூலை மூன்றாம் முறையாகப் பதிப்பித்து சிவநேசச் செல்வர்களுக்கும், சிவனடியார்களுக்கும், சிவகோத்திர நகரத்தார் பெருமக்களுக்கும் வழங்கும் பொருட்டு, ஐயா அவர்களின் கொள்ளுப்பேரன் ராம.சொ.இராமநாதன் கணக்கு இயல் வல்லுநர் (இருப்பு) புதுக்கோட்டை அவர்கள் முயற்சி எடுத்து சிறப்பித்துள்ளார்கள்.

மேற்படி இராமநாதன் அவர்களின் அன்பு மகன் சொ.ராம.சீனிவாசன் (எ) சொக்கலிங்கம் திருமண விழாவில் 02.04.2019 ஐயா அவர்களின் சரித்திரச் சுருக்க நூல் ஒன்று அடியேனை எழுதச் சொல்லி அதனையும் பக்திபாடல்களுடன் அருமை மகள் தீபா நாச்சம்மை இயற்றிய வாழ்த்துக் கவிதைகளையும் இணைத்து ஒருசிறு நூலாக்கி வெளியிட்டு விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் வழங்கினார்கள்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சைவமும், தமிழும் போற்றி வளர்த்த ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் நற்றமிழ் மொழியில் 108 நூல்கள் படைத்திருக்கிறார்கள். ஐயா அவர்களின் பெரும் பொக்கிஷமான 108 தமிழ் நூல்களை ஒவ்வொன்றாக, ஆண்டிற்கு பத்து நூல்கள் என்றவாறு 2030 (ஐயா அவர்கள் மறைந்த 100வது ஆண்டுக்குள் செலவினைக்கருதாது மறு பதிப்பு செய்து, தமிழ் கூறும் நல்லுலகம் மகிழுமாறும், பயனுறுமாறும் திரு.சொ.இராமநாதன் அவர்களை ஆவன செய்யும்மாறு பணிவன்புடன் வேண்டுகிறேன். ஐயா, அவர்களை நினைத்து போற்றும் அவர்வழிப் பிள்ளைகளும் சுற்றமும் நீடுவாழ்க!

திருச்சிற்றம்பலம்

காரைக்குடி
31.01.2021

அடியேன்
பழ.மாணிக்கம்

முகவுரை

ஸ்ரீமத். சொக்கலிங்க ஐயா அவர்கள் சுத்தாத்துவித சைவ சித்தாந்தச் செந்நெறிச் செல்வராய், அந்நெறிக் கண் உறைத்து நின்றும், அந்நெறியே முத்திநெறி எனப் பிறர்க்குப் போதித்தும், அந்நெறி மேன்மேலும் ஓங்கிவளர்ந்து, இவ்வுலகம் உய்திபெற வேண்டும் என்னும் நன்னோக்கத்தானே அது விருத்தியாதற்கு இன்றியமையாத "மெய்கண்ட சித்தாந்த வித்யா சாலை", அமைத்தும், மற்றுஞ் சிவபுண்ணியங்களைச் செவ்விது செய்தும், செய்வித்தும். உபகரித்த உத்தம சிவ புண்ணியசீலராவர்; ஆதலின் அவர்கள் சரித்திரம் உலகத்தில் விளங்கவேண்டுவது அவசியகமெனப் பல பெரியோர்களும், சிவநேசர் திருக்கூட்டத்தார்களும், பிற அன்பர்களும் மிக்க விருப்புடன் ஐயா அவர்களுடைய மாணாக்கர்களிடம் தெரிவித்தார்கள்.

அவ்வின்ப மொழியானது இயல்பாகவே ஐயா அவர்களின் சரித்திரத்தை எழுதவேண்டும் என்னுங் கருத்துக் கொண்டிருந்த மாணாக்கர்களின் எண்ணத்தை விரைந்து ஊக்க அவர்கள் யாவரும் ஒருங்கு கூடிச் சிற்றறிவினனாகிய என்னையுந் தம்முள் ஒருவனாக மதித்து "இப்பணியை நீயே செய்க" என்று கட்டளையிட, யாவரும் ஒருப்பட்டுக் கூறும் அக்கட்டளையை மறுக்க வொண்ணாமலும், குருவைத் துதித்தல் உத்தம சிவ புண்ணியமெனக் கருதியும் அதனை மேற்கொண்டு ஐயா அவர்கள் நேரில் சொல்லக் கேட்டவைகளையும், நேரில் அறிந்தவைகளையும், ஐயா அவர்களுடைய புத்திரர், மாணவர், நண்பர், முதலியோர் சொல்லக் கேட்டவைகளையும் ஒரு கோவைப்படுத்தி இச்சரித்திரம் எழுதலாயிற்று.

இச்சரித்திரத்திற் குறைபாடுகளிருப்பினும் பெரியார் சரித்திரமான படியால் நீரைப்பிரித்துப் பாலைக் கொள்ளும் அன்னம்போல் குற்றங்களைந்து குணமளைந்து பாராட்டும் வண்ணம் உத்தமர்களைப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்!

காரைக்குடி — இங்ஙனம்

யுவ வருடம் ஐப்பசி மாதம் (1935) — ராம.உ. இராமசாமி

உ
சிவமயம்

உலகம்பட்டி சித்தாந்த சைவ நிலையம்
ஸ்ரீலஸ்ரீ இலக்குமண சுவாமி அவர்கள்
மதிப்புரை

நீர்வளம், நிலவளம், பொருள்வளம் நிறைந்த காரையம்பதியில் தனவைசிய மரபில் இற்றைக்கு எழுபத்தெட்டு ஆண்டுகட்குமுன் திருவவதாரம் செய்து தமது இளம்பருவத்திற்றானே இலக்கணவிலக்கியம், சித்தாந்த சாத்திர முதலிய கருவிநூல் அறிவு நூல்களை உத்தமாசிரியர் முன் ஐயம் திரிபறக்கற்றுத் தெளிந்து புலவர் திலகமென யாவரானும் மதிக்கப்பெற்று திருப்புத்தூர்த் தலபுராணம் ஆகிய பல தலபுராணங்களையும், இறைவன் மீதும், இறைவன் அடியார் மீதும் பலபிரபந்தங்களையும் பாடியும், பலகட்டுரை நூல்களியற்றியும், சிவகாம விதிப்படி பெருமைமிக்க சிவாசாரியரிடத்தில் சமயவிசேட நிருவாண தீக்கைகள் பெற்று சிவபூசை சிவாலய சேவைகளையிடையறாது செய்தும், தம்மை வந்தடைந்த நன்மாணக்கர்களுக்கு அவரவர் மதிநுட்பம் நோக்கி கருவி நூல், அறிவு நூல்களை மனத்தெளிவுறப் போதித்தும், பெரிய அவைக்களங்களில் அரியேறு போன்று வீற்றிருந்து சைவ வீரத்துடன் பிரசங்கமாரி பொழிந்து உலகாயதம், பாஞ்சராத்திரம், ஏகான்மவாதம் முதலிய புறச்சமயங்களைக் கண்டித்து சிவமே பரம்பொருள் என நாட்டியும், சமய அரசாய் விளங்கும் நம் சைவத்தை யாங்கணும் பரவச்செய்தற் பொருட்டு சிதம்பரத்தில் பொய் கண்டகன்ற மெய்கண்டார் பெயரால் ஓர் வித்தியாசாலை நிறுவியும், என்றும் மாறாத சிவ வேடப் பொலிவுடன் சித்தாந்த ஞானச் சிவானுபூதிச் செல்வராய் நிலவியிருந்து பிரமோதூதவருடத்தில் சுத்த சாட்குண்ணிய பரமபதியாகிய சிவபரஞ்சுடரின் திருவடிப் பேறெய்திய தவப் பெரியாராகிய ஸ்ரீலஸ்ரீ, சொக்கலிங்க ஐயா அவர்களின் திவ்விய சரிதத்தை ஐயா அவர்களின் மாணாக்கருள் தலைசிறந்து விளங்குபவராயும், கல்விச்செல்வம் பொருட்செல்வம் நிறையப்பெற்றவராயும், அதிவிரைவில் செய்யுளியற்றும் புலமைத் திறம்வாய்க்கப்

பெற்றவராயும், சிவபத்தி, அடியார்பத்தி, குருபத்தியிற் சிறந்து விளங்குபவராயும், காரையம்பதிவாசராயும் உள்ள திருவாளர் ராம.உ. இராசாமிச் செட்டியாரவர்கள் இனிய செந்தமிழ் வசன நடையில் எழுதியுள்ளார்கள். இச்சரிதத்திற்கண்ட நிகழ்ச்சிகளுள் ஒன்றேனும் புனைந்துரையன்று. இத்தவப் பெரியார் பெருமையை இச்சரிதத்தானும் இதன் பிற்பகுதியிலுள்ள இரங்கற்பாக்கள், அனுதாப உரைகளானும் நன்குணரலாகும்.

தேசிகர் தம்மைச் சிவநேசர் தம்மையும்
ஈசனெனவே உளத்துளெண்

எனச் சைவசமய நெறியிற் கூறியாங்கு சிவனடியவரைச் சிவனெனவே கண்டு வழிபட வேண்டுவது மரபாகலின் இப்பெரியார் சரிதத்தைச் சிவசரிதமாகவேயெண்ணி சிவநேசச் செல்வரனைவரும் ஏற்று அன்போடு படித்துப் பாராட்டி இறைவன் அருட்பேற்றிற்குரியராகி இன்புற்று வாழ்வாராக.



உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

இந்நூலின் முதற்பதிப்பு நீண்டகாலத்திற்கு முன்பே முற்றும் செலவாகிவிட்டமையாலும், சைவ சமயத்தின் உண்மை நெறியைத் தம் வாழ்வில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றை முறையாகக் கைக்கொண்டு வாழ்ந்த பெருமானாரின் வரலாறு கற்றுணர்ந்தார்க்கும் மற்றவர்களுக்கும் வழிகாட்டியாகும் என்ற கருத்தாலும் இவ்விரண்டாம் பதிப்பு வெளிவருகிறது. முதற் பதிப்பின் விரிவான அனுபந்தத்தின் சிற்சில பகுதிகள் மட்டும் இப் பதிப்பில் சேர்க்கப் பெற்றுள்ளன.

அன்பர்களுக்கு ஐயா அவர்களின் வரலாறு சிறந்த வழிகாட்டியாக விளங்கிச் சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கத் தில்லை வெளியில் எல்லையில் நடம்புரியும் நடராஜப்பெருமான் நல்லருள் துணை புரிவதாக.

இப்பதிப்பைச்சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த காரைக்குடி திருமகள் அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி உரியதாகுக.

சிதம்பரம், — மெ.சி.வி.
27.8.1964 — தருமபரிபாலகர்கள்

மூன்றாம் பதிப்புரை

காரைக்குடி — ராம.சொ.திரு
20.02.2021 — சொ.ராம

சிறப்புப்பாயிரம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத்

தமிழ்ச் சொற் பொழிவாளர்

மகிபாலன்பட்டி

பண்டிதமணி. உயர்திரு. மு.கதிரேசச்

செட்டியாரவர்கள்

இயற்றியது.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னை
யுணருஞ் சைவ நெறி
சார்ந்து வாழ்ந்த பெருந்தகையான் தமிழ் நூல்
பலவுந் தகவுணர் ந்தோன்
செம்மை நலஞ்சால் காரைநகர்த் திருவார்
தனவை சியமரபு
திகழத் தோன்றிச் சிவபதமே சிரத்திற்
கணியாப் பூண்டவன்சீர்
மும்மை யுலகும் புகழ்ந்தேத்து முதியோன்
எங்கள் சொக்கலிங்க
முனிவன் சரிதக் கடலினிறை முகந்து
தெளித்தான் யாவனெனின்
மெய்ம்மை வழுவா நெறிநின்று விமலன்
அடிக்கட் பத்திமிக
மேவும் இராம சாமியெனும் விநய
குணஞ்சால் நல்லோனே,

சிறப்புப் பாயிரம்

தேவகோட்டை, சிவகாம சங்கம்

திரு. பொ.முத்தையா பிள்ளை அவர்கள், இயற்றியது

பூவுலகில் மேலாந்தென் பாண்டி நாட்டில்
பொருளோங்கு காரைமா நகரின் கண்ணே

மேவுதன வணிகர்குல விளக்காய்த் தோன்றி
    மிகுசைவ சித்தாந்த மெய்ம்மை தேறி
யாவுமாஞ் சிவனைமனத் திருத்திப் பூசித்
    தெப்பொழுதுந் தனையடுத்த அன்பர் யார்க்கும்
ஆவலுடன் நூல்கள்பல பாடஞ் சொல்லி
    அருந்தமிழுஞ் சைவமுமே லோங்கச் செய்த
சொக்கலிங்க அய்யாவின் சரிதந் தன்னைத்

    தோற்றமுதல் முறைப்படுத்தித் தூய வாக்கால்
மக்களெல்லாம் உய்யும்வணம் வசன மாக
    வழங்கினான் அய்யாவுக் கணுக்க ராகித்
தக்கமரி யாதையுடன் தொண்டு செய்து
    சாத்திரங்கள் பலகேட்டுச் சைவம் பேணி
மிக்கமகிழ் காரைவா ழிராம சாமி
    மேலவனாந் தனவணிக மரபு ளோனே.

காரைக்குடி

சித்தாந்த சைவப் பெருஞ்செல்வர்

ஸ்ரீமத். ராம.சொ. சொக்கலிங்கச் செட்டியாரவர்கள்

மாணாக்கருள் ஒருவரும் தேவகோட்டை

சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய

சொ.வேலுச்சாமிக் கவிராயர் அவர்கள் *இயற்றியது.*

சீராரும் பாண்டிவள நாட்டின் மேன்மை
    திகழ்காரை மாநகரின் வடபாலிற்சேர்
பேராரு நன்முத்துப் பட்ட ணத்திற்
    பிறங்குமியாழ்ப் பாணத்தார் மனையின் முல்லைத்
தாராரும் வைசியர் தங் குலமெந் நாளுந்
    தாரணியி லோங்கவவ தரித்தோன் நல்லூர்க்
கேராரும் ஆறுமுக நாவ லர்கோ
    னிணையின் மகிழ் மீக்கூரப் பெருகுந் தொண்டன்.

அன்னவன்றன் மருமகன்பொன் னம்ப லப்பே
ரறிஞனறந் திகழ்கூட றனை நீங் காது
மன்னுசுந்த ரேசனடி தொழுமெய் யப்ப
சுவாமிவளர் வன்றொண்ட மணியன் னோர்பாற்
பன்னுதமிழ் நூல்பலவும் விளங்கக் கற்றோன்
பகர்கல்வி யறிவொழுக்கச் சிறப்பு முற்றோன்
தன்னையடை மாணாக்க ருள்ளங் கொள்ளத்
தக்கவகை நூல்பலபோ திக்குஞ் சான்றோன்.

வேதசிவா கமவழிச்சித் தாந்த மெய்ந்நூல்
விதிமுறையோர்ந் துளங்கொண்டு மேலாஞ் சைவ
போதநிலை தரப்பெறீஇ மனித யாக்கை
கிடைத்ததரன் பூசனையைப் புரிதற் கென்றே
காதலுறு சமயமுதற் றீக்கை மூன்றுங்
கனிந்தவுளத் தொடும்பெற்றுப் பெரும்பே றென்றே
போதுமுத லானபொருள் பலவுங் கொண்டு
புனிதசிவ பூசைமுறை புரியஞ் சீலன்.

சிவபெருமா னொருவனையே பரமாக் கொண்டு
திகழுள்ளக் கருத்தினிலைச் சீர்மை யாலே
யவனருளே பெருகுபுரா ணங்கண் முன்னா
அமைதருநூற் றெட்டுநூல் இயற்று மான்றோன்
தவநிறையுந் தில்லைநகர் தனின்மெய் கண்ட
சித்தாந்த வித்தியா சாலை தாபித்
துவமையிலா ஞானநூ லோது வோர்கள்
உணவுமுதற் பெறமூலப் பொருளும் வைத்தோன்.

ஆரியநற் றமிழ்வேத பாட சாலை
யரன்கோயிற் பணிதிருநந் தனமும் வைத்தல்
சீரியவாங் குளந்தோண்டல் கட்டு வித்தல்
சிறந்தகுரு பூசைபசு மடந்தா பித்தல்

பாரியக லாசாலை பலதா பித்தல்
பகருமிவை முதலறந்தன் னினத்தாரைக் கொண்
டேருறவே யியற்றுசொக்க லிங்க வாசான்
ஈசனடி நிழற்கலந்தான் சின்னாண் முன்னர்.

இத்தகையோ னுயர்சரிதம் பேறாம் பூமிக்
கியலுநல்லோர் குணங்களுரைப் பதுவு நன்றே
இத்தரணி தனிலென்ன ஔவை யாரும்
இசைத்தனரா லெனவன்னோன் சரிதம் யாரும்
சித்தசிர மஞ்சிறிது மின்றி யோரத்
தெள்ளியசெந் தமிழ்வசன முறையிற் செய்தான்
உத்தமனாம் ஒருவனவன் யாவ னென்னில்
உயர்காரை மாநகரி லென்றும் வாழ்வோன்.

துன்னுபுகழ் வைசியர்தங் குலத்தில் வந்து
தோன்றினோன் சூரைநகர்க் கோயில் கொண்டோன்
மன்னுமர பினிற்கேற்ப வர்த்த கத்தின்
வளம்பலவுந் தருமநெறி யீட்டும் வல்லோன்
தன்னனைய சொக்கலிங்க தேசி கன்பாற்
சார்தருமா ணாக்கர்பல ருள்ளும் பத்தி
தன்னுருவ மாயமைந்து தமிழி னூல்கள்
சங்கையின்றி நன்குபல சாலக் கற்றோன்.

வருசைவ சித்தாந்த ஞான நூல்கள்
வளரவன்பா லாராய்ச்சி புரியு மாண்போன்
தருவனப்பு நிறைசந்தச் செய்யுண் முன்னாச்
சார்ந்தபல பாக்களினி தியற்றுந் தக்கோன்
பெருகுமவை தனிற்கேட்போ ருள்ளங் கொள்ளப்
பிறங்கியிடு கரதலா மலகம் போலத்
தெருள்பெறவே பிரசங்கம் புரியு நல்லோன்
சிறந்தகுணக் குன்றமாய்த் திகழ்ந்து நின்றோன்.

நித்தியமு மநுட்டான முடித்த பின்னர்
நீடியதே வாரமுதன் முறைக ளோதிச்
சித்தமமகிழ் வுடன்சிவனைத் தரிச னஞ்செய்
செந்நெறிக்க ணிலைநிற்குந் திண்மை வாய்ந்தோன்
உத்தமமா குங்காசி விசுவ நாத
மேலோனைக் கனிட்டசகோ தரனா வுற்றோன்
இத்தலமெ லாம்புகழ மேன்மை பெற்ற
இராமசா மிப்பெயர்கொள் எழிற் சீரேரனே.

சிதம்பரம்

ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த விந்தியாசாலைத்
தருமபரிபாலகருள் ஒருவராகிய, காரைக்குடி
ராம.உ. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்கள்

செம்பொனுயர் மணிமாடக் காரை தன்னில்
சிவவர்க்க மானிடனா யவத ரித்து
நம்புபல நூல்கள்சிவ பரமாச் செய்து
நாட்டுசொக்க லிங்கதே சிகர்க்குக் காதை
இம்பரன்னார் மாணாக்க னிராம சாமி
யியம்பியுயர் தில்லைவித்தியா சாலை தன்னில்
பம்புநகர்க் காரையனு கூல வைங்கைப்
பரமர்சன்னி தியினிலரங் கேற்றி னானே
சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

ஸ்ரீ மத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம்

காப்பு

கணபதி வணக்கம்

செம்பொன்மணி மாடமுயர் காரை யென்னுந்
திருநகரிற் றிருவதா ரஞ்செய் தோங்கி
அம்புவியற் பெரியோர்கள் போற்றி செய்ய
ஆதரவி னீரிரண்டு நெறியுங் காட்டி
நம்புநூல் பலவியற்றி விளக்கி யாண்ட

நங்கள்குரு சொக்கலிங்க தேசி கன்றான்
இம்பர்வரு மாக்கதையிங் கியம்ப வின்சொல்
இனியபொரு ளுதவியருள் சுமுக தேவே!

அனுகூல விநாயகர் துதி

சீரி னோங்கு திருநகர் காரையிற்
பாரி னோங்கனு கூலப் பரம்பொருள்
தாரி னோங்கு கயமுகன் றாண்மலர்
நேரி னோங்கிமுன் னின்றருள் செய்யுமே.

நாட்டு வளம்

சிவபெருமான், சீவர்களை உய்யக் கொண்டருளுகின்ற உத்தமமாகிய இந்தப் புவனியின் கண்ணே, சைவசமய பரமாச்சியர்களாகிய நால்வருள், முத்தமிழ் விரகர் தம்பிரான் றோழர், முனிவர் வாகீசர், என மூவர் திருவாய் மலர்ந்தருளிய திராவிடவேதப் பதிகங்கள் பெற்ற விசிட்டத் தலங்கள் பலவற்றுள்:-

"கூடலா டானை பூவணஞ் சுழிய
திருத்தலங் கானை குற்றாலம்
ஏடக மாப்ப னூரிரா மேசம்
பராசலம் பிரான்மலை சாலி
வாடியே போற்றுந் திருப்புன வாயில்
வளமுறு தலங்கள்பன் னான்குங்
கூடிய வுயிர்போற் கொண்டிடு சீர்த்தி
குலவிடும் பெருமைபெற்ற றதுவும்".

"சீரோங்கிய மணிவாசகப் பெருமான் றிரு வாக்காம்
பாரோங்கிய பதிகத்தலம் பலவற்றுளுங் கூடல்
பேரோங்குமுத் தரகோசமங் கைவாதவூர் பெரிதாம்
நேரோங்கிடு துறைமுன்றல நிலவத்திகழ் வதுவும்".

சமயவிசேட நிருவாண ஆசாரிய தீக்ஷா குருமார்கள் விளங்கப்பெறுவதும், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் முதலியோர்

அவரவர்கள் வருணாசார தருமப்படி ஒழுகிவரப் பெறுவதும், பிரமசரிய கிருஹஸ்த வானப் பிரஸ்த சந்நியாச ஆச்சிரமங்களையுடையவர்கள், தங்கள் தங்கள் சீலங்குறைவில்லாமல் நடந்துவரப் பெறுவதும் சரியை, கிரியை, யோக, ஞானவான்கள் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதவிகளுக்குரியவர்களாய்ப் பொலியப் பெறுவதும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களைக் கொடுக்கத்தக்கதும், பாண்டிய அரசர்கள் சொக்கேசருடைய திருவருளால் செங்கோல் செலுத்தி அரசாளப் பெற்றதும், சச்சிதானந்த ஸ்வரூபர்களாகிய ஸ்ரீ மீனாக்ஷி என்னும் தடாதகைப் பிராட்டியாரும், சோமசுந்தரக் கடவுளாகிய சுந்தர பாண்டியரும், தன்னகத்தே ஒருங்கிருந்து அற்புதமாய் அரசாளப் பெற்றதும், முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் முச்சங்கங்களில் சுந்தரேசப் பெருமானும் தெய்வத் தன்மை வாய்ந்த வித்துவசிரோமணிகளும் வீற்றிருந்து செந்தமிழாராய்ச்சி செய்து சிவபரத்துவம் விளக்கப் பெற்றதும், தெய்வத்தன்மை பொருந்திய இனிய செந்தமிழ் மொழியாகரராயிச் சிவ பிரானை யொத்த அகத்திய மகாமுனிவர் விளங்குகின்ற பொதியமாமலை தன்னிடத்திற் பிரகாசிக்கப் பெறுவதும், அறுபத்து நான்கு திருவிளையாடல்களை அற்புதக் காட்சியாய்ப் பொற்புற நடித்தருளிய சுந்தரேசப் பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருவாலவாய்த் திருக்கோயில் பொலியப்பெற்று வைகை நதி சூழ்ந்த துவாத சாந்த புரமாகிய மதுரைமா நகரமானது தனக்குத் திருமுக மண்டலமாய்த் திகழப் பெறுவதும், யாதெனில்:

"மழைமதி மூன்று பெய்து வளர்நதிப் பொருனை சூழ்ந்து
உழுதொழில் வளங்கள்யாவு முயர்ந்திடக்குடிகண் மல்கி
பழகுமுத் தரும மோங்கிப் பல்கிட நிலவி யீசன்
பழம்பதி யாக நீடும் பாண்டிநன் னாடேயாகும்".

நகர்வளம்

இத்தகு வளம்பொருந்திய மங்கலகரமாகிய கீர்த்தி நிறைந்த பாண்டி நாட்டின் கண்ணே, அகத்திய மகாமுனிவர். நெல்வாயில் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளிய சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகஞ் செய்த தேனானது வெள்ளமாகப் பெருக்கெடுத்து வருகின்ற தேனாறு சூழப் பெற்றதும், மதுவொழுகும் மலர்ச் சோலைகள் மணம் பரப்பி வயங்கப் பெற்றதும், கன்னலுங், கமுகும் வேலியாகச் சூழச் செந்நெல் வளர்ந்து செழிக்கும் வயல்கள், தவறாது என்றும் முப்போகமும் விளையப் பெற்றதும், நீர் நிறை கிடங்குகளும், ஏரிகளும் நிலவப்பெற்றதும், திருமகள், கலைமகள், வீற்றிருக்கின்ற செந்தாமரை, வெண்டாமரை மலர்கள் மிகுந்து திகழுந் தடாகங்களும், பொய்கைகளும், ஓடைகளும், கூபங்களும் என்றும் நீர்வளம் நிறையப் பெற்றதும், நால்வகை மலர்நிறை நந்தவனங்கள் பசு மடம் முதலியவை பாங்கிலுற்றதும், என்றும் மங்களம் நிறைந்த விழாவறா வீதிகளில் தோரண முதலியவை சூழ்ந்து அழகு செய்யப் பெற்றதும், எத்தேசத்தின் எவ்வரும் பொருள்களுந் தன்பாற் கொண்டு தகுதியிற் கொடுக்கும் ஆவணக் காட்சியின் அற்புதம் வாய்ந்ததும், நாட்டுக்கோட்டை மகுடதனவைசியர்கள் வாழப் பெறுவதாகிய இந்திரன் மாளிகை யென்றதிசயிக்கும் பொற்கலசந்திகழ் உப்பரிகைகளும், மாடமாளிகைகளும், வானளாவப் பெற்றதும், சாதுக்கள் மடம் முதலிய மற்ற மடாலயங்கள், அன்ன சத்திரங்கள், வித்தியாசாலைகள், ஔடத சாலைகள் முதலிய அற நிலையங்கள் என்றுங் குறைவின்றி விளங்கி வரப் பெற்றதும், முதல்வராகிய விநாயகராலயங்களும், கிராம தேவதை கோயில், ஐயனார் கோயில், விஷ்ணுவாலய முதலிய ஆலயங்களும் பக்த ஜனங்கள் பக்திசிரத்தையுடன் கொண்டாடி வணங்கிப் போற்றிவரப் பெற்றதும், ஆடவரும், மகளிரும் சகல சம்பத்துகளுடன் குதூகலமாக வாழ்ந்துவரப் பெறுவதும், சூத்திரர், வைசியர், க்ஷத்திரியர், பிராமணர் முதலினோர் அவரவர் நெறிதவறாது போற்றி வருகின்ற

பொற்பு நிறைவீதிகள் அமையப் பெற்றதும், மறையவர் அத்தியனஞ் செய்யும் வேதபாடசாலைகளும், சாத்திர பாடசாலைகளும், வைதிக சைவ சீலர்களாகிய ஆதி சைவ சிவாசாரியர்கள் வாழ்ந்து வருகின்ற மாடமாளிகைகளும், சிவாகம பாடசாலைகளும், அறுபத்து மூவராதிய உண்மை நாயன்மார் குருபூசை நடாத்தப் பெற்றுச் சைவ மாதவர்கள் வாழ்ந்து வருகின்ற திருமடாலயங்களும், திருமுறைகளாகிய திருவருட்பாசுரங்கள் ஓதப் பெருகின்ற திராவிட வேத பாடசாலைகளும், பக்கத்திற் சூழ்ந்து விளங்கும் பான்மை பெற்றதும், இன்னோரன்ன பன்னருஞ் சிறப்பு வாய்ந்த இந்நகருக்கு மத்தியில் உயிராய் வேத சிவாகம திராவிட வேத பிராண பாராயண முழக்கங்களும், மங்கல வாத்திய ஒலிகளும், நிறைந்து நித்திய நைமித்திய காமிய பூசைகள் சிவாகம விதப்படி பக்தி சிரத்தையுடன் நடாத்தி வரப் பெற்ற நகரச் சிவாலயம் பிரகாசிக்கப் பெற்றதும், அக்கோயிலின் கண்ணே திருத்தொண்டு செய்யும் அடியார்களும் பெரியோர்களும் சேவிக்க உயிர்க்குயிராகிய ஸ்ரீ மீனாக்ஷி சுந்ததேஸ்வரர், விநாயகர், சுப்பிரமணியர் முதலிய பரிவார தேவர்களுடன் திருவருள் பொழிந்து அநவரத சாந்நித்திய சருவானுக்கிரக மூர்த்தியாய் விகசிக்கின்ற பெருமை பெற்றதும் யாதெனில்:

சீர்தரு காரென் மேகமார் சோலை
திகழ்பல மாடங்கள் சூழ்ந்து
ஆர்தரப் பொழிந்தே யழகுசெய் வளத்தா
லையெனுஞ் சுந்தர மமைந்த
நேர்திகழ் குடியென் புரமிது மருத
நிலத்தில்வாழ் பதியெனும் பொருள்கொள்
பார்புகழ் மேக சுந்தர புரமாப்
பகர்திருக் காரையம் பதியே.

திருவள ரிளையாற் றங்குடி மாற்றூர்
திகழ்தரு வைரவ னிரணி
புரமகிழ் பிள்ளை யார்பட்டி நேமம்
புகழிருப் பைக்குடி சூரை

மருவிவாழ் வுறுவே லன்குடிக் கோயில்
வளமிகு காணியாட் சியதாம்
உரிமையிற் போற்று முயர்நக
ரத்தா ரோங்கிவாழ் காரையம் பதியே.

முதல் அதிகாரம்

உற்பத்தி

குரு ரா			சநி
	இராசிச் சக்கரம்		சூபு. சு
	மா	ல செ	சந் கேது

இத்துணைச் சிறப்பு வாய்ந்த உத்தமர் வாழுங் காரை மாநகரின் கண்ணே, நாட்டுக்கோட்டை நகரத்தார் என்று வழங்குகின்ற அரதன மகுடதன வைசிய குலத்திலே, பெருங்குடியில், குலசேகரபுரமும் இராஜ நாராயணபுரமும் பூர்வ பூம்புகார்க் காணியாகவும் இளையாற்றங்குடியும், மருதங்குடியான பிள்ளையார்பட்டி கோவிலும் பாண்டிநாட்டுக் காணியாகவுமுடைய திருவேட் பூருடையார் கோத்திரத்திலே (பட்டத்திலே) யாழ்ப்பாணத்தார் வீடு என்று வழங்குங் குடும்பத்திலே ராம. கு. ராம. இராமநாதச் செட்டியாரும் அவர் மனைவியார் முத்துக்கருப்பியம்மையாரும் செய்த தவப்பயனாய் வேதசிவாகம புராணதிகாச முதலாகிய சகலசாஸ்திர சாரமாகிய சுத்தாத்வைத சைவ சித்தாந்த சன்மார்க்கத்தை விருத்தி செய்து நிலை நாட்டும் பொருட்டு, ஐயா அவர்கள் கலியப்தம் 4157க்குச் சமமான மெய்கண்டான் வருடம் 632 நள வருடம் ஆடி மாதம் 23ம் தேதி (1856) செவ்வாய்க்கிழமை பகல் பூர்வ பட்சச் சதுர்த்தி திதியும் அஸ்த நட்சத்திரமும் சித்த யோகமும் அமிர்த கரணமும் கூடிய சுபதினத்தில் துலா லக்கினத்தில் திருவவதாரஞ் செய்தார்கள். ஆங்கில ஆண்டு (08.08.1856)

இந்த அருமைப் புதல்வருக்கு மாதா பிதாக்கள் சாதகன்ம முதலிய சடங்குகளும் மகிழ்ச்சியுடன் செய்து **“சொக்கலிங்கம்”**

என்று யாவரும் புகழும் படி பரிசுத்தமாகிய அழகிய திருநாமஞ் சூட்டினார்கள்.

இப் பெயர் ஆதியில் சொக்கலிங்கச் செட்டியார் அவர்கள் என்றும், பின்னர், சுத்தாத்துவைத சைவ சித்தாந்தச் செல்வராகிய சொக்கலிங்க ஐயா அவர்கள் என்றும், சிறப்பாக ஐயா அவர்கள் என்றும் வழங்கி வருகின்றது.

ஐயா அவர்களுக்கு முன்பின் சகோதரர்கள் இருவரும் சகோதரிகள் நால்வரும் உளரானார்கள்.

ஐயா அவர்கள் இளமைப் பருவத்திலேயே கல்வி கற்றுக் கொள்ளுதலில் மிக்க ஊக்கமுடையவர்களாய் உபாத்தியாயரிடத்தில் தமிழ் ஆரம்பக் கல்வி கற்றுவரலானார்கள்.

நகர தன வைசியர்களின் கிரமப்படி ஐயா அவர்கள் உரிய பருவத்திலே கார்த்திகைப் புதுமை என்கின்ற சடங்கு செய்யப் பெற்று அஸ்வாரூடராய் விநாயக ராலயஞ் சென்று விநாயகப் பெருமானைத் தரிசனஞ் செய்விக்க பெற்றார்கள். பள்ளிக்கூட உபாத்தியாய ரிடத்திற் படிக்க வேண்டிய ஆரம்பக் கல்வி கற்று முற்றிய பின்பு தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் கற்று வருங்காலத்தில் மாதா பிதாக்கள் கட்டளைப் படி குடும்ப காரியங்களைப் பார்த்துக் கொண்டு ஒழிவு நேரங்களில் அறுபத்து மூவர் மடத்துக்குப் போக்குவரவு வைத்துக் கொண்டிருந்தார்கள். இதனைப் பிதா அறிந்து வரவரக் கல்வி விருத்தியடைந்து வருதலையும் சிவபக்தி மிகுந்து வருதலையும் நோக்கி இனிக் குடும்பத்தைக் கவனியாமல் அதீத நிலையிற் சென்றாலுஞ் செல்லக்கூடும் என்று நினைத்து ஐயா அவர்கள் மடத்துக்குப் போய் வருதலைத் தடை செய்ய நினைத்தார்கள். ஐயா அவர்கள் அதையறிந்து பின்பு வீட்டுக் காரிய சம்பந்தமாக வெளியிற்போகுஞ் சமயத்தில் பிதாவுக்குத் தெரியாதபடி மடத்துக்குபோய் வந்து கொண்டிருந்தார்கள். சிறிது காலஞ் சென்றபின் அதுவும் பிதாவுக்குத் தெரிந்து சிறிது கோபமுண்டாகி, ஐயா அவர்கள் இரகசியமாக மடத்துக்குப் போகுஞ் சமயம் பார்த்து, அங்கே போய்ச்

செய்கிறதை பார்த்து வருவோமென்று கருதி பிதாவானவர். மறைவாய்ப் போய் பார்க்குஞ் சமயங்களில் ஐயா அவர்கள் சில சமயங்களில் அனுகூல விநாயகர் தரிசனஞ் செய்து கொண்டு பூசை செய்வதையும், சில சமயம் கந்த புராணம் முதலிய சிவபுராணப் பிரசங்கஞ் செய்து வருதலையும் பார்த்து மிகுந்த சந்தோஷமடைந்து தாம் வந்தது ஐயா அவர்களுக்குத் தெரியாமல் வீட்டுக்குத் திரும்பி விடுவார். பிதாவானவர் இப்படி இரகசியமாகப் போய்ப் பார்த்து வந்த பின் மிக்க உவகையுடையவராய் இவ்வுத்தமமாகிய காரியத்திற்குத் தடைசெய்யக் கூடாதென்று கருதி ஐயா அவர்கள் நோக்கம்போல் விடுத்து மகிழ்ச்சியடைந்திருந்தார்.

உடுமலைப்பேட்டை என்னும் ஊரில் வியாபார முறையில் பிதா முதலினோரிருந்து நடத்தி வந்த காலத்தில் ஐயா அவர்கள் சிறு பிராயத்திலே அவ்வூருக்குப் போய் அவர்களோடு கடையிற் சிலகாலமிருந்து பின்பு ஊருக்கு வந்தார்கள். பின்பு யாழ்ப்பாணத்துக்கும் சொந்தக் கடைக்கு வியாபார முறையை உத்தேசித்து பதினேழாவது வயசு முதல் பல தடவைகளில் போய் வந்தார்கள். அக்காலத்திற்றான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களை யடுத்துச் சிஷ்யராக இருந்தார்கள். அவ்விஷயம் மூன்றாம் அதிகாரத்தில் விளக்கப்படும்.

முதலாம் அதிகாரம் முற்றுப் பெற்றது.

இரண்டாம் அதிகாரம்
இல்வாழ்க்கை

ஐயா அவர்கள் பதினாறாவது வயசில் பிரசோற்பத்தி வருடம் ஆவணி மாதம் 18ம் தேதி (1871) கோட்டையூரில் தனவைசியர் குலத்திலே பெருங்குடியிலே மண்ணூருடையார் கோத்திரத்திலே (பட்டத்திலே) வீர பாண்டியபுரம் பூம்புகார்க் காணியாகவும், மாற்றூர் பாண்டிநாட்டுக் காணியாகவுமுடைய, க வீ. ராம இராமநாதச் செட்டியார் குமாரியாகிய இலக்குமி அம்மையார் என்பவரைத் திருமணஞ்செய்து கொண்டர்கள். தாது வருடம் மாசி மாதம் (1877) முதல் காரைமா நகரையடுத்த முத்துப் பட்டணத்தில் இல்லம்

அமைத்துக் கொண்டு பெற்றோர் முதலியவர்களுடன் அதில் வாசஞ்செய்து வந்தார்கள்.

இருபத்து நான்காம் வயசில் பிரமாதி வருடம் ஆவணி மாதம் 8ம் தேதி (1879) திருப்புனவாசல் முதன்மையாரும் பழம்பதிநாதர் பூஜா துரந்தரருமாகிய பாதரக்குடி ஸ்ரீலஸ்ரீ வேங்கடாசலபதி குரு சுவாமிகளிடத்தில் நகர தனவைசியர் கிரமப்பிரகாரம் காரைமா நகரில் சிவதீக்ஷை பெற்றுக் கொண்டார்கள்.

ஐயா அவர்கள் தமது இருபத்தெட்டாவது வயசில் தம்மனைவியாராகிய இலக்குமி அம்மையார் சுபானு வருடம் ஐப்பசி மாதம் 20ம் தேதி (1883) செவ்வாய்கிழமை சிவபதம் அடைந்தமையால்; இருபத்தொன்பதாவது வயசில் பார்த்திப வருடம் ஆனி மாதம் 28ம் தேதி (1885) காரை மாநகரையடுத்த முத்துப்பட்டணத்தில் தனவைசியர் குலத்தில் பெருங்குடியிலே மருதேந்திரபுரமுடையார் கோத்திரத்திலே (பட்டத்திலே) வீர பாண்டியபுரம் பூம்புகார்க் காணியாகவும், வயிரவன் கோயில் பாண்டிநாட்டுக் காணியாகவுமுடைய ராம. மெ. சின்னச் சாத்தப்ப செட்டியார் குமாரியாகிய விசாலாட்சி அம்மையார் என்பவரை இரண்டாவது திருமணஞ் செய்து கொண்டார்கள். ஐயா அவர்களுக்கு முதன் மனைவியாரிடத்துப் பிறந்த மீனாட்சி என்னும் புத்திரிக்குச் சந்ததி விருத்தியடைந்திருக்கிறது.

இரண்டாவது மனைவியாரிடத்து முதற் பிறந்த திலகவதி என்னும் புத்திரிக்கும் சந்ததி விருத்தியாய் வருகின்றது. இரண்டாவது தோன்றிய இராமநாதராகிய திருநாவுக்கரசு செட்டியார் என்னும் ஓர் சற்புத்திரருக்கும் சந்ததி விருத்தியாகி வருகின்றது அச்சற் புத்திரரும் சைவ சமயாசார சீலராய்ச் சிவ பக்தராய்ச் சிறந்து விளங்கி வருகின்றார்.

ஐயா அவர்களுக்கு நாற்பத்து நான்காம் வயசில் சார்வரி வருடம் மார்கழி மாதம் 6ம் தேதி (1900) அமரபட்சச் சதுர்த்தசி திதியில் இரண்டாவது மனைவியாராகிய விசாலாட்சி அம்மையார் சிவபதமடைந்தனர்.

ஐயா அவர்கள் அதிபாலிய முதல் காரைமாநகர் அறுபான்மும்மை நாயன்மார் குருபூசை மடத்திற்கு மிகுதியும் போக்குவரவு வைத்துக் கொண்டு ஸ்நாநம் நித்திய நியம சிவபூசை பாராயணம் ஸ்ரீ அனுகூல விநாயகர் தரிசனம் சிவதரிசனம் முதலிய சிவ புண்ணியங்களைத் தவறாது செய்து கொண்டுகாலந்தோறும் இல்லத்துக்குச் சென்று திருவமுது செய்து வந்தார்கள்.

ஐயா அவர்களுடைய தந்தையார் சுபானு வருடம் மாசி மாதம் 7ம் தேதி (1884) சொந்த இல்லத்தில் கந்தபுராண படனம் நடைபெற்று வருங்காலத்தில் சிவ பதமடைந்தனர், அவருக்குச் செய்யவேண்டிய பிதுர் கர்மங்கள் யாவும் சிரத்தையுடன் அதி விமரிசையாக விதிப்படி ஐயா அவர்கள் செய்தார்கள்.

ஐயா அவர்கள் தம்முடைய தாயாரை மகாமக ஸ்நாநங் கருதிக் கும்பகோணத்திற்கு அழைத்துப் போயிருந்தார்கள். அங்கே தாயாருக்கு உடம்பு அசௌகரியமாயிருக்கக் கண்டு திருவாரூருக்கு அழைத்து வந்து அத்தலத்தில் தங்கி தக்க வைத்தியம் பார்க்கச் செய்து, தொண்டு செய்து கொண்டுவந்தார்கள். அப்படி இருக்கும் நாளில் அந்தத் திவ்ய புண்ணிய ஸ்தலத்தில் துன்முகி வருடம் மாசி மாதம் 7ம் தேதி (1897) தாயார் சிவபதமடைந்தனர். அவருக்குச் செய்ய வேண்டிய மாதுர் கர்மங்கள் யாவும் விதிப்படி சிரத்தையுடன் செய்து முடித்து ஊருக்கு வந்தார்கள். தந்தை தாயாராகிய இருமுது குரவர்களுடைய வருஷாப்திக முதலியவற்றையும் சிரத்தையுடன் நடத்தி வந்தார்கள்.

வேதாரணியம் என்ற உத்தமஸ்தலத்தில் அறுபத்து மூவர் திருமடாலயத்தில் தமது சஷ்டியப்தபூர்த்தி சாந்தியைத் தோகைமலைச் சுப்பிரமணியக் குருக்களையா முதலிய சிவாச்சாரியார் முகமாகச் சிவகாம முறைப்படி செய்து கொண்டார்கள். ஸ்ரீ வேதாரணியே சுவருக்கும், யாழைப்பழித்த மொழியம்மையாருக்கும், பரிவார தேவர்களுக்கும், கும்ப ஸ்தாபனங்கள் செய்து பூசித்து அபிஷேக பூசை, நைவேதனங்கள் செய்வித்துத் தெரிசனஞ் செய்து கொண்டார்கள்.

ஐயா அவர்கள், குடும்பத்திலிருக்குங் காலத்திலும் "தாமரையிலையிற் தண்ணீர் போலப்" பற்றற்று நின்று குடும்பத்துடனும், தனித்தும், அன்பு மேலீட்டால் இடையிடையே அநேக சிவஸ்தல யாத்திரை செய்துகொண்டு வந்தார்கள். ஸ்ரீ சிதம்பரத்தில் இருக்குங் காலத்தில் அக்ஷய வருஷத்தில் ஸ்ரீகாசியத்திரை செய்து புண்ணிய தீர்த்திங்களில் ஸ்நானஞ் செய்து பல சிவஸ்தல தெரிசனஞ் செய்து கொண்டு வந்தார்கள் அந்த யாத்திரை முற்றியபின் "காசி விஸ்வேசர் அடைக்கலப் பதிகம்" என்னும் நூலியற்றினார்கள்.

இரண்டாம் அதிகாரம் முற்றுபெற்றது.

மூன்றாம் அதிகாரம்

கல்வி கற்றல்

ஐயா அவர்கள் இளமைப் பருவத்தில் பள்ளிக் கூடத்து உபாத்தியாரிடத்துப் படித்துக் கொண்ட பின் 17ஆவது வயசில் வியாபார முறையை உத்தேசித்து யாழ்பாணம் போயிருந்த காலத்தில், அங்கே சுத்தாத்து வைத சைவ சித்தாந்த வியவஸ்தாபகராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானையடுத்து அத்தியந்த பக்தி விசுவாசத்துடன் சிஷ்யராகவிருந்து, அவர்களிடத்தும், அவர்களுடைய மருகரும், முதன் மாணவருமாகிய வித்துவ சிரோமணி ஸ்ரீமத் பொன்னம்பல பிள்ளையவர்களிடத்தும், தமிழ் இலக்கண, இலக்கிய புராண இதிகாச முதலியவைகளை முறையாகப் பாடங்கேட்டுக் கொண்டார்கள்.

மேற்படி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தம்மையடுத்த மாணாக்கராயுள்ள மற்றைத் தனவைசிய நகரத்தார்களை அழைக்கும் பொழுது அவர்கள் பெயருடன் செட்டியார் என்பது சேர்த்து அழைப்பார்கள். ஐயா அவர்களை மட்டும் அவர்கள்பால் வைத்த அன்புரிமை மேலீட்டால் சொக்கலிங்கம் என்று பெயர் மாத்திரையாகவே சொல்லியழைப்பார்கள்.

ஐயா அவர்களும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களுடைய திருவடிப் பாதுகையை பத்திர புஷ்பங்களால் பூசித்து வந்தார்கள். பின்பு நாவல குரு வணக்கம் என்று ஒரு பதிகமும் பாடி வணங்கியிருக்கிறார்கள். எப்பொழுதும் அவர்களுடைய மேன்மையும், தீரத்தையும், கீர்த்தியையும், அடிக்கடி புகழ்ந்து பேசி வருவார்கள்.

மேலும், சிறந்து விளங்குகின்ற தேவிகோட்டை மாநகரின் கண்ணே, தனவைசியர் குலத்திலே, புகழிடங் கொடுத்த பட்டினம் பூம்புகார்க்காணியாகவும், இருப்பைக் குடிக்கோயில் பாண்டி நாட்டுக் காணியாகவும் உடைய சூடாமணிபுரமுடையார் கோத்திரத்திலே (பட்டத்திலே), திருப்பெருந்துறை அண்ணாமலைச் செட்டியார்ரவர்கள் குமாரராகிய நாராயணச் செட்டியார் என்னும் ஸ்ரீலஸ்ரீ வன்றொன்ட தேசிகரவர்களையடுத்து சிஷ்யராக இருந்து அநேக இலக்கண இலக்கியங்களும், சாஸ்திரங்களும் பாட முறையிற் கேட்டுக் கொண்டார்கள். பின்பு, வன்றொன்ட குருஸ்துதி என்னும் நூலியற்றி அதில் அவர்களது தேக வியோகத்தைக் குறித்துத் தமக்குள்ள பிரிவாற்றாமையை விளக்கியிருக்கின்றார்கள். ஐயா அவர்கள் தாமியற்றி வெளியிட்ட நூல்களிலெல்லாம் தம்மை ஸ்ரீலஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணாக்கரென்றே வெளியிட்டமையின் வன்றொண்டரவர்களிடத்திலேயே பல நூல்களும் நிரம்பக் கற்றுப் புலமை நிரம்பப் பெற்றார்கள் என்பது தெரிகிறது.

ஸ்ரீலஸ்ரீ வன்நொண்டரவர்களிடம் பாடங்கேட்டுக் கொண்டபின்பு; சிறப்புற்றோங்கிய காரைமா நகரின் கண்ணே, தணவைசியர் குலத்திலே, குலசேகரபுரம்பூம்புகாக்காணியாகவும், இளையாற்றக் குடிக் கோயில் பாண்டி நாட்டுக் காணியாகவுமுடைய கழனிவாசற்குடியார் கோத்திரத்திலே (பட்டத்திலே), "சாலக்கரையார் வீடு" என்னும் குடும்பத்திலே, ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார் செய்த அரும் பெருந் தவத்தால் அவதரித்த ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள்

உத்தமோத்தம துவாதசாந்தபுரமாகிய மதுரை மாநகரத்தை அடைந்து ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரருக்கு நால்வகை மலரெடுத்து அத்தியற்புத விசித்திரக் கட்டுமாலை முதலிய புஷ்பப் பணிவிடைகள் செய்து கொண்டும், அமராவதிபுதூர் நகர தனவைசிய ஸ்ரீமான்கள் வயி. நாக. ராம. வகையார்களைக் கொண்டு ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோயிலில் விமானம், மண்டபம், கோபுரம், திருமதில் முதலிய திருப்பணிகளை நடப்பித்து வருங்காலத்தில், அவற்றை அதி நுட்பதிட்ப தீட்சண்யமாகிய பார்வையுடன் நடத்தியும், மேலும், தேவிகோட்டை ஸ்ரீமான்களாகிய, மெ. வகையாரைக் கொண்டும், அமராவதிபுதூர். வயி. நாக. ராம. வகையாரைக் கொண்டும் மற்றும் அன்பர்களைக் கொண்டும், அத்தலத்தில் அறுபத்துமூவர் குருபூசை மடம், திருநந்தவனம், முதலியவைகளை தாபனஞ் செய்வித்தும், முப்பத்தைந்து வருடகாலம் அம்மதுரை மாநகரின் எல்லையை விட்டு நீங்காது இருந்து, சுவர்ணகஞ்ச ஸ்நானானுட்டான நித்திய நியம சிவபூஜை ஜெப தபத்தியான பாராயண பிரதக்ஷண விரதசீலராய்ச் சாஸ்திர விற்பன்னராய் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவர தரிசனானந்தப் பெருவாழ்வுடையராய் சுத்தாத்வைத சைவ சித்தாந்தச் செல்வச்சிகாமணியாய் நிர்மலானந்தக்கரண சிவத்தியான ஞானயோகச் சிவானுபூதிச் செல்வராய் விளங்கிக் கொண்டிருக்கு நாளில், அவர்களை ஐயா அவர்கள் அடுத்துச் சிஷ்யராக இருந்து, அவர்களுடைய நியம மேலீட்டால் அவர்களுக்கு அவகாசங் கிடைப்பது அருமையாயிருந்தமையால், பக்தி விசுவாசத்துடன் நிழல்போல் விடாது பின்பற்றி நின்று கேட்பன கேட்பாரானார்கள். மேற்படி சுவாமிகளும் ஐயா அவர்களுடைய அத்தியந்த பக்தி சிரத்தை முதலியவைகளை நோக்கி, சிவசாஸ்திர பாடஞ் சொல்லுதலும் சிவதருமம் என்று கருதி, திருமாலை கட்டும் பொழுதும், பிரதக்ஷிணம் வரும்பொழுதும் முறை வழுவாது பெரிய புராணம், சித்தாந்த சாஸ்திரம் முதலிய நூல்களைப் பாடஞ்சொல்லி வந்தார்கள்.

ஐயா அவர்கள் அவ்வாறு பாடங்கேட்டுக் கொண்டிருந்த காலத்தில் மூத்த மனைவியார் சிவபதம் அடைந்தமை தெரிந்தும் பாடங்கேட்குதலில் மிகுந்த சிரத்தையுடைவர்களாய் மதுரைமாநகரிலேயிருந்து, பின்பு கொஞ்சநாட்சென்று, சுவாமிகளால் வற்புறுத்தப்பட்டு ஊருக்கு வந்தார்கள்.

பின்பு, மேற்படி சுவாமிகள் நிரதிசயானந்தப் பெரும் பேறு பெற்றபின், ஐயா அவர்கள் மேற்படி சுவாமிகள் பேரில் மெய்யப்ப சுவாமிகள் பதிற்றுப் பத்தாந்ததி என்னும் ஒரு தோத்திர நூலும், மேற்படி சுவாமிகள் சரித்திரச் சுருக்கமும் இயற்றிப் பாராட்டினார்கள். அந்தச் சுவாமிகளுடைய திருவடிப் பாதுகையை ஐயா அவர்கள் பூஜை செய்கிற வேதிக்கைக்குப் பக்கத்தில் வைத்து நித்தியமும் பத்திர பூஷ்பங்கொண்டு அருச்சித்து வந்தார்கள்.

முற்கூறிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் ஸ்ரீலஸ்ரீ வன்றொன்டரவர்கள், ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள் ஆகிய மூன்று குருமூர்த்திகளிடத்திலும் ஐயா அவர்கள் எப்பொழுதும் பக்தி விசுவாசத்துடனிருந்து, சமயம் வாய்ந்த போதெல்லாம் அம்மூன்று குரவர்களுடைய குணாதிசயங்களையும், அருமை பெருமைகளையும் பாராட்டிப் பேசிக் கொண்டாடி வருவார்கள் அப்பெரியார்களுக்கும் ஐயா அவர்களுக்கும் புந்தியிற் பதிந்துள்ள உரிமை மகிழ்ச்சியைப் பற்றி:

திருப்புத்தூர்ப் புராணத்தில்

மாற்றமொன்று சொலச்சொலித்தம் மகவம் மாற்றம்
வயங்காமை யுரைப்பமகிழ் பிதாக்கண் மானத்
தேற்றமிலேற் குணர்த்தியவன் றொண்ட நாதன்
றிருவால வாயமர்மெய் யப்ப னெம்மான்
ஆற்றுபணி கொண்டடியென் முடியிற் சூட்டு
மாறுமுக நாவலர்கோ னவன்றாட் கன்பே
போற்றிவழி வந்தவிமற் சரமெய்ச் சீலர்
புந்திமகிழ் வுறுவரென்சொற் புன்மை நோக்கி.

எனவரும் செய்யுளால் நன்கு விளக்கியுள்ளார்கள். ஐயா அவர்கள் தங்களுடைய ஆசிரியர் மூவர்க்கும் அவரவர் சிவபத மடைந்த திருநக்ஷத்திரத்திலே குருபூசை நடத்தியும். நடப்பித்தும் அவர்களுடைய சரித்திரங்களை எடுத்து விரிவாகப் பிரசங்கித்தும் பாராட்டி வருவார்கள்.

மூன்றாம் அதிகாரம் முற்றுப் பெற்றது

நான்காம் அதிகாரம்
கல்வி கற்பித்தல்

ஐயா அவர்கள் பாடஞ்சொல்லுந் தன்மையில் மாணாக்கரிடத்துப் பொருள் அபேக்ஷை இன்றி அவர்கள் தமக்குத் தொண்டேனுஞ் செய்யவேண்டு மென்னும் நோக்கமும் இல்லாமல், பாடஞ் சொல்லுதல் உத்தம சிவதருமம் என்னும் ஒன்றே கருதி, வந்த மாணாக்கர் கட்கு உரிய காலந்தோறும் அவர்கள் சௌகரியத்தை அனுசரித்தும், சலியாமலும் மிகுந்த பற்றுடன் முகமலர்ச்சியோடிருந்து தமிழில் ஆரம்பக் கல்வி முதல் இலக்கணம், நீதி நூல், இதிகாசம் புராணம், சித்தாந்த சாத்திரம் வரை பாடஞ் சொல்லி வந்தார்கள்.

“குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே”.

என்ற ஆசிரியராகத் தக்கவர் இலக்கணத்துக்கும்,


“ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப”.

என்ற பாடஞ் சொல்லும் இலக்கணத்துக்கும் இலக்கியமாகவுமுள்ளவர்கள், மேலும் மற்கட சம்பந்த நியாயமாகத் தொடர்ந்து வருகின்ற மாணாக்கர்கட்கு அதிப் பிரியத்தோடு பாடஞ் சொல்வது மன்றி, அவ்வாறு வாராத மாணாக்கர்களையும் மார்ச்சார சம்பந்த நியாயமாக வலிந்தழைத்து அவர்களுக்கும் பிரியத்தோடு பாடஞ் சொல்லுவார்கள். பாடஞ் சொல்லி வரும்பொழுது காலம் மிகுதியானாலும் சலிப்பின்றிச் சந்தோஷமாகவே பாடஞ் சொல்லுவார்கள். மேன்மேலும் அநேகர் வந்து பாடங்கேட்டு நன்னிலைமைக்கு வரவேண்டும் என்ற அவாவே இவற்றிற்கெல்லாங் காரணமாமென்க.

பெரியபுரணம் ஆராய்ந்து அதன் திட்பநுட்ப நோக்கக் கருத்துக்களை யறிந்து போதிப்பதில் ஐயா அவர்கள் அதிமேதாவி யானவர்கள் என்பது யாவரும் நன்கறிந்ததே! அவ்வாறு மாணாக்கர்களுக்குப் பெரியபுராணம் பாடஞ் சொல்லும் பொழுது பாட முறையில் வேண்டிய அளவு சொல்வதுமன்றி சில சமயங்களில் அந்தப் புராணத்திலுள்ள அரிய பெரிய விஷயங்களைப் பக்தி மேலீட்டால் பிரசங்காமிருத வருஷமாகப் பொழிந்து, மாணாக்கர்களுக்கும், சபையிலிருப்பவர்களுக்கும் மனதிற்சாத்திரப் பொருளாகிய அமிர்தம் நிறைந்து தங்கிக் குளிர்ந்திருக்கும்படி செய்வார்கள்.

ஐயா அவர்களிடத்திற் பாடங்கேட்டுக் கொண்ட மாணாக்கர்கள் பிராமணர், தேசிகர், முதலிமார், பிள்ளைமார், தனவைசியர் முதலிய எல்லா வகுப்பினருமுள்ளார். அவர்களில் அநேகர் வித்துவசிரோமணிகளாரகவும், உபந்நியாசகர்களாகவும், தமிழ்ப் பண்டிதர்களாகவும், உபாத்தியாயர்களாகவும், சிறப்புற்றிருக்கின்றனர்.

நான்காம் அதிகாரம் முற்று பெற்றது.



ஐந்தாம் அதிகாரம்
பிரசங்கம்

ஐயா அவர்கள் வருடந்தோறும், ஐப்பசி மாசத்திற் கந்த சஷ்டியுற்சவாரம்பதினம் முதல் சஷ்டி தினம் வரை காரை மாநகர் அறுபத்துமூவர் மடாலயத்தில், கந்த புராணத்தில் சூரசம்மாரப்படலம், தேவர்கள் போற்று படலம், மீட்சிப்படலம், தெய்வானையம்மை திருமணப் படலம், வள்ளியம்மை திருமணப் படலம் முதலிய பகுதிகளைப் படித்துப் பொருள்கூறித் தத்துவார்த்தங்களும் அதி நுட்பமாய்க் காட்டி கேட்போர் மனமகிழப் பக்தி சிரத்தையுடன் பிரசங்கஞ் செய்வார்கள்.

அதுவன்றியும் சந்தர்ப்பம் நேர்ந்த பொழுதெல்லாம், விபூதி, உருத்திராஷம், ஸ்ரீ பஞ்சாக்ஷரம் முதலிய சிவ சாதனங்களின் மகிமைகளையும், சிவபுராணங்களிலும் பெரிய புராணத்திலும் ஆங்காங்குள்ள விசிஷ்டங்களையும், பெரியோர்களுடைய மகிமைகளையும் பக்தி சிரத்தையுடன் கேட்போர்க்கு ஆனந்தம் உண்டாகும்படி பிரசங்கஞ் செய்வார்கள்.

அவ்வாறு பிரசங்கஞ் செய்யும் பொழுது சிவமகிமைகளைப் பிரமாணங்களோடு எடுத்துக் காட்டி ஆண்டானடிமைத் திறமும் விளக்கி, புறச்சமய நிராகரணஞ் செய்து சிவபரத்துவ ஸ்தாபன விஷயம் நேர்ந்துழி வீராவேசத்துடனிருந்து, சிங்ககர்ச்சனை போன்ற கெம்பீரத் தொனியுடன் கடன்மடை திறந்தாற்போன்ற தடைபடா வாக்கினால் கன்னெஞ்சமுங் கசிந்துருக எவ்வளவு நேரமானாலும் கேட்போர் சலியாமல் கேட்கத்தக்க இனிமையுடன் விபூதி உருத்திராக்க தாரண சிவவேடத் திருமேனிப் பொலிவுடனிருந்து பிரசங்கஞ் செய்வார்கள்.

ஐயா அவர்கள் சிவநேசர் திருக்கூட்டத்தில் கலந்து அளவளாவி அதில் அக்ராசனாதிபதியாகவுமிருந்து பிரசங்கஞ் செய்து வந்தமை ஏழாம் அதிகாரத்திற் சொல்லப்படும். அந்தத் திருக்கூட்டத்தின் எட்டாம் ஆண்டு மூன்றாவது கூட்டம் பிரமோ தூத வருடம் புரட்டாசி மாதம் 20ம் தேதி (1930) பள்ளத்தூரில் நடைபெற்ற பொழுது ஐயா அவர்கள் தங்கள் காலத்தின் கடைசிப் பிரசங்கமாக "நித்திய மங்கள

சோபானம்" என்பதைப் பற்றி உபந்யாசம் புரிந்தார்கள். இது வியக்கத்தக்கதாகும்.

எப்பொழுதும் சிவமகிமையையே பேசுதலிலும், எழுதுதலிலும், மாணாக்கர்களுக்குப் போதித்தலிலுமே காலங்கழித்து வந்தார்கள்.

ஐந்தாம் அதிகாரம் முற்றுபெற்றது.

ஆறாம் அதிகாரம்
வாசஸ்தானம்

ஐயா அவர்கள் ஆதியில் காரை மாநகரிலுள்ள தமது கிருகத்திலும், பின் அவ்வூரை யடுத்த முத்துப் பட்டணத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற இல்லத்திலும் வசித்து வந்தார்கள்.

காரைமாநகர் அறுபத்து மூவர் குருபூசை மடாலயத்தில் நாடோறும் ஸ்நானஞ் செய்து சிவபூஜை பண்ணிச் சிவதரிசனஞ் செய்து கொண்டு திருவமுதருந்துவதற்கு முத்துப்பட்டணத்துக்குப் போய்வருவது வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தார்கள்.

பின்பு தமது, 44வது வயசில் (1900) இரண்டாவது மனைவியார் சிவபதமடைந்தபின், முற்கூறிய குருபூசை மடத்திலேயே வாசஞ்செய்து கொண்டும், தவசிப்பிள்ளை பாகஞ்செய்து கொடுக்கப் பகலில் ஒருவேளை திருவமுது செய்து கொண்டும், இரவில் பால் பழம் ஆதிய சாத்துவிக உணவருந்தியும் வந்தார்கள்.

அதன்பின், 50வது வயசில் (1906) திருஞான சம்பந்தப் பெருமான் தம்முடைய திருமணந் தெரிசிக்க வந்தோர் யாவருக்கும் கொள்ளை கொள்ள வீடுதவிய திவ்விய ஸ்தலமாகிய திருநல்லூர்ப் பெருமண மென்னும் ஆச்சாபுரத்திற்குச் சென்று. அவ்வூர் மிராசுதார் பொன்னுச்சாமி முதலியாரவர்களைப் பக்கத் துணையாகக் கொண்டு, அந்நகரில் தமது தமக்கையாரின் புத்திரராகிய காரைமாநகர் அ. வீர. ராம. சொக்கலிங்கச் செட்டியாரால் குருபூசை மடம் ஸ்தாபிக்கச் செய்து கீலக வருடம் வைகாசி மாதம் 20ம் தேதி (1908) பிரதிஷ்டை செய்வித்து அத்திருமடத்தில் அறுபத்து மூன்று நாயன்மார் முதலியோர்

குருபூசைகள் என்றும் நடைபெற்றுவரத் திட்டம் அமைப்பித்து நடைபெறச் செய்து, அத்திரு மடத்திலேயே கீலக வருடம் ஆவணி மாதம் 19ம் தேதி (1908) முதல் தேவார பாடசாலையும் ஸ்தாபித்து நடத்திவரச் செய்து, அப்பாடசாலை மாணாக்கர்களுக்குச் சைவ இலக்கண, இலக்கிய பாடங்களைத் தாமே போதித்துக் கொண்டுமிருந்தார்கள்.

அங்கே இருக்குங்காலத்தில் "ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ்" "போற்றிக் கலிவெண்பா" "திருவூசல்" என்ற பிரபந்தத் திரயமும் அத்தீச்சுரப் புராணமும் பாடி வெளியிட்டார்கள். அந்தத்தலத்தில் பல அன்பர்களைக் கொண்டு ஆகம பாடசாலை, வேத பாடசாலை பசுமடம், திருநந்தவனம் முதலிய சிவ தருமங்களைச் செய்வித்தும், காரைமாநகரை யடுத்த முத்துப்பட்டணம் பெரி. நா. நா. நாராயணச் செட்டி யாரவர்களைக் கொண்டு திருஞான சம்பந்த சுவாமிகள் திருக்கோயில், பெரிய மண்டபம், உத்சவ மண்டபம் முதலிய திருப்பணிகள் செய்வித்து, பிரமாதீச வருடம் ஆனி மாதம் 27ம் தேதி (1913) கும்பாபிஷேகம் செய்வித்தும் அத்தலத்திலே மேற்கூறிய அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் நித்திய நியம சிவபூசாதி பாராயணங்கள் செய்துகொண்டும், திருவெண்ணீற்றுமையம்மை சமேத சிவலோகத்தியாகேசரையும் திருஞான சம்பந்தப் பெருமானையும் தரிசனஞ்செய்து கொண்டும் இன்புடன் இருந்தார்கள்.

பின்னர் ஸ்ரீசிதம்பர ஸ்தலவாசஞ்செய்ய முன்னினார்கள். அச்சிதம்பர விசிட்டமாவது:

"அத்தன் பரதத் துவனித் தநடத் தமரும்
பொதுவின் பெயர்மன் றமலஞ்
சத்தும் பரிரண் மயகோ சமகத்
தனிபுண் டரிகங் குகைவண் ககனஞ்
சுத்தம் பரமற் புதமெய்ப் பதமச்
சுழுனா வழிஞா னசுகோ தயநற்
சித்தம் பரமுத் திபரப் பிரமந்
திகமுஞ் சபைசத் திசிவா லயமே."

“என்றின் னமரே கமரே கமெடா
வேரார் பொதுவின் பேரா ரணநூ
னின்றென் றுமியம் பிடுமின் னுமிதி
னேரே யெனவிங் காரே யறிவா
ரன்றந் நிலையத் தலைவன் னிலைகண்
டவருண் டெனவின் றுணர்கின் றனமான்
மன்றத் தெரியத் தருமென் றருளால்
வளர்சிந் தைதெளிந் தனன்மா முனியே.”

என்று கோயிற்புராணத்தில் விரித்தருளிச் செய்தபடி ஞான சபையின் பெயர்களை இன்னும் பலவாக வேதநூல்கள் எடுத்து எக்காலமும் கூறும் என்று அதன் மகிமைகளைத் தெளிந்து, அங்கிருந்த வியாக்ர பாத முனிவரும்; தில்லைவனத்தில்.

“மாடுறு மறைகள் காணா மன்னுமம் பலமொன்றுண்டாங் காடுது மென்றும்” எனவும்.

“மற்றது சிதம்ப ரத்த வாய்மையான் மாயா நீர்மைப் பற்றுடனழியா தென்றும் பயின்றுள துயிர்களெண்ணி னற்றவஞ் செய்தா னீடு நாடரு ஞான நாட்டம் பெற்றவர் காண்பார் காணப் பெறாதவர் பிறப்பரன்றே.”

எனவும், சிவபிரானால் உபதேசித்து நேரில் அனுக்கிரகிக்கப் பெற்ற ஆதிசேடனாகிய பதஞ்லிமா முனிவரும்; நித்தியானந்த நடன தரிசனங்கண்டு பேரானந்தப் பெருவாழ்வு பெற்ற சிற்சபை பிரகாசிக்கின்ற உத்தமோத்தமான தில்லைவனமென்னும் சிதம்பர க்ஷேத்திரத்தின் கண்ணே, எட்டாம் அதிகாரத்தில் விவரிக்கப்பெறும். **“ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்யா சாலையை”**, மெய்கண்டான் ஆண்டு (700) உருத்திரோற்காரி வருடம் ஆவணி மாதம் 7ம் தேதி (1923) ஸ்தாபனஞ் செய்து, அதில் அறுபத்து மூன்று நாயன்மார் முதலியோர் குருபூசையும். சைவ இலக்கிய இலக்கண சித்தாந்த சாஸ்திர பாடங்களும், நடைபெறச் செய்து, சைவசமயத்தை விருத்தி செய்து கொண்டும் சிவதரும முதலியவைகளை நடத்திக் கொண்டும், ஸ்ரீமந் நடராஜப்

பெருமானுடைய குஞ்சித பாத தரிசனானந்தப் பெருவாழ்வுடையராய், சிவத்தியான ஞானயோக சீலராய், "சொக்கலிங்க தேசிகராச்சிரம" மென்று சொல்லத்தக்க அவ்வித்தியாசாலையிலேயே வாசஞ்செய்து கொண்டிருந்தார்கள்.

ஐயா அவர்கள் காரை மாநகரில் இருந்தது பிரமசரிய ஆச்சிரமும், முத்துப்பட்டணத்தில் இருந்தது கிருஹஸ்தாச்சிரமும், காரைமாநகர் அறுபத்து மூவர் மடத்திலும் ஆச்சாபுரம் அறுபத்து மூவர் மடத்திலும் இருந்தது வானப் பிரஸ்தாச்சிரமமும் தில்லைவனமாகிய சிதம்பர தலத்திலிருந்து சந்நியாச ஆச்சிரமும் ஆமென்று சொல்லத்தக்கதாம்.

இன்னும் காரைமாநகர் அறுபத்துமூவர் மடாலயத்திலிருந்து சரியை கிரியைகளை யனுட்டித்ததும், ஆச்சாபுரத்திலிருந்து யோகநிலையை யனுட்டித்ததும், சிதம் பரத்திலிருந்து ஞானநிலையை அனுட்டித்ததும் ஊகிக் தக்கதாம்.

ஆறாம் அதிகாரம் முற்று பெற்றது.

ஏழாம் அதிகாரம்

சகவாசம்

ஐயா அவர்கள் இலௌகிக கௌரவத்திற் சிறிதும் பற்றில்லாதவர்களாதலின், ஆஸ்திக சிவசம்பந்தமில்லாத வேறிடங்களுக்கு எக்காலத்துஞ் செல்லமாட்டார்கள். ஆதி சைவர்களிட்டத்திலும், குருலிங்க சங்கமச்சார்புடைய பக்திமான்களிடத்திலும் மிக்க விசுவாசமுடையவர்களாகவே யிருப்பார்கள்.

ஐயா அவர்கள் கந்த பரம்பரை சூரியனார் கோயில் ஸ்ரீலஸ்ரீ சிவாக்கிர யோகிகள் ஆதினத்தில் சித்தாந்த ஞான பானுவாக வெழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீமகா சன்னிதானமாகிய முத்துக்குமார தேசிக சுவாமிகளவர்கள் சைவசித்தாந்த ஞான குரு பீடமாய் மிகச்சிறந்த சைவஞானக் கல்வி கேள்விகளிலும், சிவானுபவத்திலும், ஒழுக்கத்திலும் ஒப்புயர்வின்றி விளங்கியிருந்தது கண்டு, அக்குருமூர்த்திகளிடத்து அத்தியந்த அன்பு வைத்து

அடிக்கடி சென்று அவர்களை தரிசித்து சித்தாந்த ஞான சாத்திர விஷயங்களை அளவளாவிக் கலந்து தெளிந்து ஆனந்த முறுவார்கள். அந்தக் குரு மூர்த்திகளும் ஐயா அவர்களுடைய சைவ ஞான சீலமும் சமயப்பற்று முதலியனவும் நோக்கி, அவர்களிடத்தில் மிகுந்த கருணையோடும் அளவளாவி மகிழ்வார்கள். ஐயா அவர்கள் திருநல்லூர்ப் பெருமண மிருந்து மேற்படி குருமூர்த்திகட்கு எழுதும் விண்ணப்பங்களெல்லாம் செய்யுளாகவே எழுதுவார்கள். குருமூர்த்திகளும் இவர்களுக்கு எழுதும் திருமுகங்களில் பல செய்யுட்களால் ஆசீர்வதித்து எழுதுவார்கள்.

செந்தமிழ்ச் செல்வத்திருமொழியும், சிவசமயத்திருவருட் செல்வத்திருநெறியும் அபிவிருத்தியாகும் பொருட்டு உருத்திரோத்காரி வருடம் ஆவணி மாதம் 7ம் தேதி (1923) தீர்மானிக்கப் பெற்று 29ம் தேதி விநாயக சதுர்த்தி தினத்தில் கணேச மாநகரின் கண்ணே திருவருள் பொழியும் கற்பக விநாயகப் பெருமாள் சந்நிதானத்தில் ஸ்தாபனம் செய்யப் பெற்று, வெளிவந்துலாவும் சிவநேசர் திருக்கூட்டமானது செந்தமிழ்ச் செல்வமும் திருவருட் செல்வமும் விளக்கி விருத்திசெய்து வருதலையும், திருக் கூட்டத்தாரும் சிவநேசச் செல்வரும் விபூதி உருத்தி ராக்ஷ தாரணராய் நித்திய நியம ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபதப சிவதரிசன பாராயன ஆசார சீலமுடையவர்களாயிருத்தலையும், சைவ சமய பரமாசாரிய சுவாமிகள் நால்வரையும் எழுந்தருளச் செய்து கொண்டு, நகர தனவைசியர்கள் வாழ்கின்ற ஊர்கடோறும் அகர வரிசையாக ஒவ்வொரு மாதமும் பூர்வபக்ஷப் பிரதோஷ காலத்திற் சென்று சிவாலய வழிபாடு செய்து கொண்டு நியதியாய்ச் சைவப் பிரசங்கம் புரிந்து வருதலையும்; வருடப் பூர்த்திக் கொண்டாட்டத்தை ஒன்பது நகரச் சிவாலயங்களிலும் அகர வரிசையாக வருடம் ஒரு கோயிலுக்கு ஆவணி மாதம் பூர்வ பட்ச விநாயக சதுர்த்தி தினத்தில் சென்று சிவதரிசனஞ் செய்து கொண்டு, சைவப் பிரசங்கங்கள் செய்து சிறப்பித்து வருதலையும்; வருடந்தோறும் ஆவுடையார் கோயிலுக்கு ஆனித் தரிசன

காலத்திற் சென்று சுவாமி தெரிசனம் உபன்யாசம் முதலியன செய்து வருதலையும் மற்ற சிவக்ஷேத்திர உற்சவ சிவ தரிசனஞ் செய்து வருதலையும் கூடும் பொழுதெல்லாம் பர சமய கோளரிகள் போற்றோன்றிச் சிவமகிமைகளைப் பாராட்டிப் பேசியளவளாவி வரும் ஆனந்தக் காட்சியையும்; இத்திருக்கூட்டமானது ஸ்ரீசிதம்பரத்தில் ஸ்ரீமெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை ஸ்தாபனஞ் செய்யப் பெற்ற வருட மாதந் தேதியிலேயே இயல்பானே தீர்மானிக்கப் பெற்ற ஒற்றுமையையும், நோக்கி ஐயா அவர்கள் மீக் கூர்ந்து அத்திருக்கூட்டம் மாதந்தோறும் செல்லுகின்ற ஊர்களுக்கும் வருடப் பூர்த்திக் கொண்டாட்டத்தின் பொருட்டுச் செல்லுகின்ற நகரச்சிவாலயங்களுக்கும் உடன் சென்று உபந்நியாசகராகவும், தலைவராகவுமிருந்து இனிது பிரசங்கஞ் செய்து வந்தார்கள்.

அன்றியும், இத்தகு மேன்மைபடைத்த சிவநேசர் திருக்கூட்டத்தை சிதம்பர க்ஷேத்திரத்திற்கு ரக்தாக்ஷி வருடம் மார்கழி மாதத்தில் (1924) நடந்த ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய ஆருத்திரா தரிசன காலத்தில் அழைத்துப்போய் ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையிலேயே உறைவிடங் கொடுத்து ஆங்காங்குள்ள பல வித்வ சிரோமணிகளையும் வருவித்து இத்திருக்கூட்டத்திற் கலந்து சைவப் பிரசங்கஞ் செய்யும்படி செய்தார்கள்.

மேலும் சிவநேசர் திருக்கூட்டத்தார் வருடந் தோறும் மார்கழித் திருவிழாக்காலத்தில் மேற்படி மெய் கண்ட சித்தாந்த வித்தியாசாலையில் வந்து தங்கித் திருவமுது செய்து ஸ்ரீநடராஜப் பெருமானுடைய தரிசனானந்தப் பெருவாழ்வு பெற்றுச் சிவசம்பந்தமான பிரசங்கங்கள் செய்து வரவேண்டுமென்று அவர்கள் பாற் கேட்டுக்கொண்டு அதற்குரிய ஏற்பாடுகளும் செய்து வைத்திருக்கிறார்கன்.

சூரியனார் கோவில் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ இலக்கண சுவாமியென்கிற முத்துக்குமார சுவாமிகள் சைவ இலக்கிய இலக்கண ஆராய்ச்சி செய்து மேற்படி ஆதீன

சந்நிதானத்தினிடத்தில் சித்தாந்த சாஸ்திர பாடங் கேட்டு அதிற்றெளிந்த ஆராய்ச்சியும், சமஸ்கிருத பாஷையிலும், தகுந்த படிப்பு ஆராய்ச்சியும், அதற்குத் தகுந்தபடி அறிவு ஒழுக்கங்களில் மேதாவியானவர்களும், சிவபூஜா துரந்தரருமானபடியால் அவர்களிடத்தில் ஐயா அவர்கள் அத்தியந்த அபிமானமுள்ளவர்களாக விருப்பார்கள்.

ஸ்ரீலஸ்ரீ பாற்சாமி யென்கிற கனகசுந்தரயோகி நாதசுவாமிகளிடத்தில் மிகுந்த அன்புபாராட்டி அந்தச் சுவாமிகள் சுத்தாத்துவித சைவசித்தாந்த முடிவு நிலை கண்டு அதில் உறைத்து நிற்கின்ற மேதாவித் தன்மையையும் புகழ்நது பாராட்டி அத்தியந்த உண்மை விசுவாசத்துடனிருப்பார்கள்.

இன்னும், தனவைசியமரபில் இளையாற்றக் குடிக் கோயில் கிண்கிணிக்கூருடையார் கோத்திரத்தில் அவதரித்துப் பிரமசரியம் கிருகஸ்தம் வானப்பிரஸ்தம் என்னும் ஆச்சிரமங்கள் முற்றிச் சந்நியாச ஆச்சிரமத்திலிருந்து வருவோரும், இலக்கண இலக்கிய சித்தாந்த சாஸ்திரங்களில் வல்லுநரும், அநேக மாணாக்கர்களுக்குப் பாடம் போதித்து வருவோரும், சிவபூஜா துரந்தரருமாகிய உலகன்பட்டி ஸ்ரீலஸ்ரீ இலக்குமண சுவாமிகளிடத்தில் அவர்கள் உண்மை நிலை கண்டு அன்புடையவர்களாக விருப்பார்கள்.

இன்னும், சுத்தாத்துவைத சைவ சித்தாந்தக் கொள்கை உடையவரிடத்தும் தென்மொழி வடமொழி ஆராய்ச்சியுள்ள வித்துவ சிரோமணிகளிடத்தும், விபூதி ருத்ராக்ஷ தாரணர்களாய் பஞ்சாக்ஷர ஜெப நியம முதலியவையுடைய சிவனடியார்களிடத்தும் அன்பு பூண்டு அளவளாவிப் பேசிக் கொண்டிருப்பதில் மிகுந்த விருப்பமுள்ளவர்களாக விருப்பார்கள்.

ஏழாம் அதிகாரம் முற்றுப் பெற்றது.

எட்டாம் அதிகாரம்

தருமஸ்தாபனம்

ஐயா அவர்கள் காரைமா நகரிலுள்ள அறுபத்து மூவர் குருபூஜை மடத்தை விசாலமாகக் கட்டிப் புதுப்பித்தற்கு வேண்டும் முயற்சி செய்தார்கள். சில காரணங்களால் அச்சமயம் அது முடிவு பெறாதிருந்தலும் இனி அந்த முயற்சியே ஆதாரமாக விருந்து அனுகூல விநாயகப் பெருமான் அநுக்கிரகந் துணையாக அத்திருப்பணி நகரத்தார்களால் விரைந்து நடைபெற்றுச் சிறப்புற்றோங்கும்.

இன்னும், காரை மாநகரில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலை ஸ்தாபித்து அதில் ஆரம்பந் தொடங்கிச் சாஸ்திர பாடம் வரை தமிழ் பிரதானமாகவும், இங்கிலீசும் கிரந்தமும் துணைப்பாஷையாகவும் வைத்து விஸ்தாரமாக நடத்தி வர வேண்டுமென்று கருதி, திருவாளர் முத்த. வெ. வெள்ளையப்ப செட்டியாரவர்களுடன் ஆதியில் முயன்று பொருள் சேகரித்து வந்தார்கள். பின்பு ஐயா அவர்கள் ஆச்சாபுரம் போயிருக்குங் காலத்தில், இங்குள்ளார் காலதேச வர்த்தமான நோக்கி, இங்கிலீஷ் பிரதானமாகவும், தமிழும் கிரந்தமும் துணைப்பாஷையாகவும் நடத்திவர ஏற்பாடு செய்து, அப்படியே இப்போதும் உன்னத நிலையில் நடைபெற்று வருகின்றது.

பின்பு, ஆறாம் அதிகாரத்திற் சொல்லியபடி திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சாபுரத்தில் அறுபத்து மூவர் குருபூசை மடம் ஸ்தாபித்து அதில் அறுபத்து மூவர் திருவுருவப்படமும், விநாயகர் திருஞானசம்பந்தர், சேக்கிழார் விம்பமூர்த்திகளும் பிரதிட்டை செய்வித்தும், தேவார பாடசாலை வைப்பித்தும், திருஞானசம்பந்த ஸ்வாமிகள் திருக்கோயில், பெரியமண்டபம், உத்சவ மண்டபம், முதலிய திருப்பணிகளும், ஆகம பாடசாலை, வேதபாடசாலை, பசுமடம், திருநந்தனவனம் முதலிய சிவ தருமங்களைப் பல அன்பர்களைக் கொண்டும் நடப்பித்து வந்தார்கள்.

பின்பு, தமிழ் இலக்கண இலக்கிய வித்தியாபிவிருத்தியும், சிவசாஸ்ராபிவிருத்தியும், சிவ பரத்துவ மகிமைகளை எடுத்துக் காட்டி விளக்குஞ் சைவ சமயாபிவிருத்தியும், சிவ தருமவிருத்தியும் செய்துவர நீடித்த காலமாக அதிவிருப்புற்றிருந்தார்கள்.

அப்பொழுது, யாழ்பாணம் அம்பலவாண நாவல சுவாமிகள் சிதம்பர ஸ்தலத்திலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் திருவுருவப் பிரதிட்டை செய்து, அந்தச் சந்நிதியில் இத்தருமஞ் செய்வது மிகப் பொருத்தம் என்று சொன்னபடியால், அவரிடத்தில் அது சம்பந்தமான காரியங்களைத் தீர்மானம் பண்ணிக் கொண்டு நகர தனவைசியர்களிடத்தில் பொருளீட்டி, அவ்வம்பலவாண நாவல சுவாமிகள் மூலமாய் மேற்படி கோயிற்றிருப்பணி செய்து வருங்காலத்தில் மேற்படி சுவாமிகள் முன் பேசிக்கொண்ட பேச்சுப்படி நேர்மையான முறையில் வாராமையினால் அதை அவர்களிடத்து விட்டு அவர்கள் சார்பினின்றும் விலகிக் கொண்டார்கள்.

அதன்பின், வித்தியாபிவிருத்தி சைவ சமயாபிவிருத்தி முதலியவைகளைச் சிவபரஞ்சுடாரகிய ஸ்ரீ நடராஜப் பெருமான் சிதாகாசமத்தியில் அனவரதமும் ஆனந்த தாண்டவஞ் செய்தருளுகின்ற பொதுவாகிய அந்தச் சிதம்பர க்ஷேத்திரத்திலேயே செய்தற்கு நோக்கங் கொண்டு, நகரதன வைசியர்களிடம் பொருளீட்டிச் சொந்தப் பொருளுங்கூட்டி அங்கு மாலைகட்டித் தெருவில் ஓர் கட்டிடம் வாங்கி, அதைத் தக்கபடி புதுப்பித்து மெய்கண்டான் ஆண்டு (700)க்கு உருத்திரோத்காரி வருடம் ஆவணி மாதம் 7ம் தேதி (1923) "**ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை**" ஸ்தாபனஞ் செய்து, அதில் ஆறாம் அதிகாரத்திற் கூறியபடி அறுபத்துமூவர் ஆதிய திருவுருவப் படம் பிரதிட்டை செய்து என்றென்றும் நித்திய பூசையும் நாயன்மார் குருபூசைகளும் நடந்து வரும்படிக்கும், தமிழிலக்கண விலக்கிய வித்தியாபிவிருத்தியும், சைவ சித்தாந்த சாஸ்திராபிவிருத்தியும், சைவ சமயாபிவிருத்தியும், சமஸ்கிருதாபிவிருத்தியும் மற்றும் தருமங்களும் நடந்து வரும்படி அதற்குரிய ஆசிரியர்களையும்

மாணாக்கர் முதலியவர்களையும் அமைத்து என்றும் நடைபெறும்படி ஏற்பாடு செய்து நடத்தி வந்தார்கள்.

அங்கு நாடோறும் பிராதக் காலத்தில் சிவகெங்கைத்தீர்த்த ஸ்நானஞ் செய்து சிவபூசை பண்ணி ஶ்ரீமத் நடராஜ மூர்த்தியைத் தரிசனஞ் செய்து கொண்டு ஶ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையில் இருந்து அங்குள்ள மாணாக்கர்களுக்குத் தாங்களும் பாடஞ் சொல்லி வந்தார்கள்.

ஶ்ரீமத் நடராஜ வள்ளலாருடைய மார்கழி மாசத் திருவாதிரை தரிசனத்துக்கு வரும் நகரத்தார்களும், வித்துவ சிரோமணிகளும், சிவநேசர் திருக் கூட்டத்தார்களும், சிவனடியார்களும் இந்தத் திருமடத்திலேயே தங்கியிருந்து சைவப்பிரசங்கங்கள் செய்யவும், அவற்றைச் சிரவணஞ் செய்யவும், திருவமுது அருந்தவும் ஏற்பாடு செய்து வைத்துள்ளார்கள். அந்தப் பிரகாரம் வருடந்தோறும் குறைவின்றி அவைகள் நடந்து வருகின்றன.

மேற்படி வித்தியாசாலையிலுள்ள சிவனடியார்களும் தரிசனார்த்தமாக வருகிற சிவனடியார்களும் சிவபூசை செய்யவும். திருமுறைப்பாராயணஞ் செய்யவும் பூசை மண்டபமும், நந்தவனமும் அமைத்திருக்கிறார்கள். பல சிவனடியார்களும் நாடோறும் சிவபூசை முதலியன செய்து வருகின்றார்கள்.

அன்றியும் சிதம்பர சிவாலயத்திலே விநாயகப் பெருமானுக்கும் ஶ்ரீமத் நடராஜப் பெருமானுக்கும், சிவகாமி அம்மையாருக்கும், ஶ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரருக்கும், அண்ணாமலையாருக்கும், சுப்பிரமணியப் பெருமானுக்கும், சமயாசாரியர்களுக்கும், அர்ச்சனை அபிஷேக நைவேத்தியங்கள் இன்ன இன்ன காலங்களில் இன்ன விதஞ் செய்வது என்பதும் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள். அவைகளும் அவ்வாறே நடைபெற்று வருகின்றன.

ஐயா அவர்கள், பெரிய புராணம் பாடியருளிய சேக்கிழார் பெருமான் அவதரித்த குன்றத்தூருக்குப் போக விரும்பி இலக்கணஸ்வாமிகள் என்கிற முத்துக்குமாரசுவமிகளுடனும் வேறு

சில அன்பர்களுடனும் பிரமோதூத வருடம் வைகாசி மாதம் (1930) திருமயிலாப்பூர் சென்றிருக்கும் போது, சென்னை வாசிகளாகிய ஆங்கில வைத்தியகலாசாலைப் போதகாசிரியராயுள்ள திருவாளர் சின்னச் சாமிப்பிள்ளை முதலிய அன்பர்கள் வந்து ஐயா அவர்களோடு சைவ விஷயங்களை அளவளாவி மகிழ்ந்து குன்றத்தூருக்கு அழைத்துச் சென்று அங்கே சேக்கிழார் பெருமான் குருபூசை மகோற்சவ தினத்தில் பல அன்பர்கள் கூடிய பெருஞ்சபையில் சேக்கிழார் பெருமானது பெருமையையும் பெரிய புராணத்தின் அருமையையும் பற்றி மகோபந்நியாசம் செய்து சபையிலுள்ளார்களைப் பெரிதும் மகிழச் செய்தார்கள். அதுகேட்ட சபையோர்களெல்லாரும் மிகவும் கொண்டாடினார்கள். அன்று முதல் குன்றத்தூர் சேக்கிழார் பெருமானுக்கு அபிஷேக நைவேத்திய அர்ச்சனை செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

மேற்படி வித்தியாசாலைத் தருமங்கள் நிலைபேறாக நடந்து வரும் பொருட்டு அதற்கு வேண்டிய பொருள்களை நகரதன வைசியர்களிடம் ஈட்டி, கட்டிடம் அமைத்தும் புஸ்தகங்களும் விளைநிலங்களும் வாங்கி வைத்தும் பண நிதியமைத்தும் மனவுறுதியுடன் மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையைப் போற்றி வந்தார்கள். சுக்கில வருடம் மார்கழி மாதம் 4ம் தேதி (1929) அதன் ஆவேதனமும் யாவருந் தெரிந்து கொள்ளும்படி அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள்.

இந்தச் சிவதருமமாகிய ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையானது என்றென்றும் அபிவிருத்தியாய் நடந்து வரும்படி பரிபாலனஞ் செய்து வருவதற்காக திருவாளர்கள், அரிமழம் அ. அரு. அண்ணாமலைச் செட்டியார், காரைக்குடி ராம. உ. காசிவிஸ்வநாதன் செட்டியார், காரைக்குடி முத்துப்பட்டணம் ராம. சொ. திருநாவுக்கரசு செட்டியார், கரைக்குடி கா. கா. அழ. காளையப்ப செட்டியார், மேற்படியூர் முத்த.வெ. சொக்கலிங்கச் செட்டியார், மேற்படியூர் சேவு. மெ. மெய்யப்ப செட்டியார் ஆகிய ஆறுபேர்களுக்கும் சுக்கில வருடம் மார்கழி மாதம் 4ம் தேதி (1929)

ஐயா அவர்கள் தரும பரிபாலன உரிமைப்பத்திரம் எழுதிக் கொடுத்து ஒப்பித்தார்கள். அந்தப் பிரகாரமே ஆறுபேர்களும் தம்முள் வருஷத்துக்கு இரண்டு பேர் பரிபாலகராகவிருந்து வித்தியா சாலைக் காரியங்களைச் செவ்வையாய் நடத்தி வருகின்றார்கள்.

ஐயா அவர்கள், மேலும் தமக்குத் தெரிந்தவர்களிடத்தும் சிவபக்திமான்களிடத்தும், வேண்டியவர்களிடத்தும், அவரவர்க்குத் தக்கபடி இன்ன இன்ன சிவதருதமங்கள் செய்யுங்கள் என முயன்று செய்வித்த சிவாலயத் திருப்பணிகள், குருபூசை மடங்கள், விபூதி மடங்கள், வேதசிவாகம பாடசாலைகள், தேவாரபாடசாலைகள், திருநந்தவனங்கள் முதலானவை அநேகம் உள்ளன.

எட்டாம் அதிகாரம் முற்றுபெற்றது.

ஒன்பதாம் அதிகாரம்


பாடற்றொண்டு

ஐயா அவர்கள் பால்ய முதல் நித்திய நியம பாராயணமும் சிவபூசையும் சிவதரிசனமும் செய்வதுடன், பெரியோர்கள் சார்பும், கல்வி சாஸ்திராராய்ச்சியுமுள்ள விற்பன்னராக விருந்தபடியால் சுயமாக விரைவிற் கவிதை பாடுவதில் அதிசாமர்த்திமுள்ளவர்களாக இருந்தார்கள்.

முதலில் தம்முடைய குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ வன்றெண்டரவர்கள் மீது, வன்றெண்ட குருஸ்துதி என்னும் ஓர் பதிகம் பாடி, சித்திரபானு வருடம் தை மாதம் (1883) அச்சிற்பதிப்பித்து வெளியிட்டார்கள். அதன்பின், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் குருவணக்கம், ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள் குரு வணக்கமும், மேற்படி சுவாமிகளது, சரித்திர சங்கிரகமும். விநாயகர் சுப்பிரமணியர், சிவபெருமான் உமாதேவியார், சமயாசாரியார்கள், சந்தான சாரியார்கள், அறுபத்து மூவராதியடியார்கள், முதலானவர்களுக்கும், சிவஸ்தலங்களுக்கும், புராணம், மான்மியம், பதிகம், மாலை, அந்தாதி, சிலேடை வெண்பா, பிள்ளைத் தமிழ், சந்தவிருத்தம், திருவூசல், நவமணி மாலை, திருவிரட்டைமணி மாலை, மும்மணிக் கோவை, மஞ்சரி, ஸ்தவம், நமகம், அஷ்டகம், கண்ணி, நாமாவளி

முதலிய செந்தமிழ்ச் செய்யுள் நூல்களும், வசன நூல்களும், இயற்றி அச்சிட்டு உபகரித்திருக்கிறார்கள். அவ்வாறு வெளியட்ட நூல்கள் நூற்றெட்டாகும். அந்நூல்களின் பெயர்களை இதனோடு சேர்க்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காணலாம், அந் நூல்களெல்லாம் சிவபரத்துவத்தையே விளைக்குந் தன்மையுடையன.

ஐயா அவர்களுடைய கையெழுத்து.



உ

சிவமயம்

கணபதி துணை

பொற்பகத்த சிற்சபையிற் பொற்பதத்த சவணிமதி பொழிநி லாமெய் அற்பகத்தர் பரசுறுதன் னருண்மேனி வெண்ணீற்றி னழகு காட்டச சிற்பகத்தன் னடங்காட்டுந் திருத்தளிப்பச் சிமகடக சிகரி மேவுங் கற்பகத்தின் பொற்பதத்தைக் கண்பிறைஞ்சி வழுத்தியுளங் கனித்து வாழலாம்.

இவையன்றியும் தக்கவித்துவான்கள் இயற்றிய நூல்களுக்குக் கொடுத்திருக்கின்ற சாற்றுக் கவிகளும், சிவாலய முதலிய திருப்பணி, கும்பாபிஷேக, உற்சவ, பாலஸ்தாபன, வாகனாதி வெள்ளோட்டங்கட்கும், விவாகம் முதலிய முகூர்த்தங்கட்கும் எழுதிக் கொடுத்த பத்திரிகைகளும் செய்யுட்களும் அளவில்லாதனவாகும்.

ஐயா அவர்கள், வேண்டுஞ் சமயம் நிமிஷ கவியாகப் பாடக் கூடியவர்களான படியால், ஓர் மாணாக்கர், பாராயணஞ் செய்தற்பொருட்டு திருவெம்பாவைச் செய்யுட்களுக்கும், கந்தரனுபூதிச் செய்யுட்களுக்கும், செய்யுள் முதற் குறிப்புத் தெரிந்துகொள்ள ஒவ்வோர் செய்யுளாக வேண்டுமென்று கேட்டுக்

கொண்டதற்கு, உடனே ஐயா அவர்கள் சொல்லிய செய்யுட்களாவன,

ஆதி பாச முத்தன்ன
வொண்ணித்திலமா லறிமானே
மோத மாரன் னேகோழி
முன்னை பாதா ளம்மொய்யார்
ஓது மார்த்த பைங்குவளை
யொடுகா தாரோ ரொரு முன்னிக்
காதற் செங்கண் ணண்ணாவுங்
கைபோற் றியுமேம் பாவைமுதல்
மாதிருமு னெஞ்சாடு லாசவா
னோர்புவளை மகமாயை திணியாகெடு
வாயமரு மட்டுகார் கூகாசெம்
முருககை வாய்முருக பேராசையா
மோதியுதி வடிவுமரி கருகாளை
யடிகூர்மெய் யோதுமாதார மின்னே
யுரைசெய்யு மானாவ வில்லேசெவ்
வான்பா முணர்த்துகலை யேபசிந்தா
சாதிசிங் காரவிதி நாதாகு
கிரியொடா தாளிமா வேழ்சவினையோ
சாகாகு றியைதூசு சாடுகர
வாகியெந் தாயுமா றாறையறிவொன்
றாதிசார் தன்னந் தனிமதியொ
டுருவாகி யைம்பதிற் றிரண்டு காப்போ
டாவிமுழு தருளம்பி காவலவர்
தருகந்த ரனுபூதி கவிகண்முதலே,

ஒன்பதாம் அதிகாரம் முற்றுபெற்றது.

பத்தாம் அதிகாரம்

சிவதீக்ஷைப் பேறு.

ஐயா அவர்கள்யாழ்ப்பாணம் போயிருந்த காலத்தில் பதினெட்டாம் வயதில் சமய தீக்ஷையும், விசேஷ தீக்ஷையும் பெற்றுக் கொண்டு திருவாசக பூசை செய்து வந்தார்கள். இரண்டாம் அதிகாரத்திற் சொல்லியபடி இருபத்து நான்காம் வயதில் நகரதன வைசியர் வழக்கப் பிரகாரம் திருப்புனவாசல் முதன்மையாராகிய பாதரக்குடி மடாதிபதியான ஸ்ரீலஸ்ரீ வேங்கடாசல குருசுவாமிகளிடத்தில் தீக்ஷை பெற்றுக் கொண்டார்கள்.

பின்பு, யாத்திரையாக முத்துப் பேட்டைக்குப் போயிருந்த காலத்தில் திருவாசக பூசையேடு காணாமற் போய்விட்டமையின் ஒரு வாரம் உணவின்றியிருந்து எட்டாம் நாள் அத்திருவேடு கைவரப் பெற்று முறைப்படி பூசை பண்ணிப் போசனஞ் செய்து கொண்டார்கள்.

அதன் பின்பு, திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சாபுரத்தில் சிவதரும ஸ்தாபனங்கள் செய்வித்து வசித்துக் கொண்டிருந்த காலத்தில், திருஞானசம்பந்த சுவாமிகள் சந்நிதானத்தில், திருப்புகலூர்ச் சுப்பிரமணிய சிவாச்சாரியவர்கள்பால் ஆன்மார்த்த க்ஷணிகலிங்க பூசையும், நிருவாண தீக்ஷையும் பெற்றுக் கொண்டார்கள். அத்தீக்ஷாகாலத்திற் பெற்றுக் கொண்ட தீக்ஷாநாமம், "தற்புருடதேவர்" என்பதாம்.

ஐயா அவர்களை யடுத்துச் சமய விசேட நிருவாண தீக்ஷை ஆசாரியாபிஷேகம் என்னும் இவைகளின் அருமை மகிமைகளைத் தெரிந்து தகுதிக்குத் தக்கவாறு தீக்ஷை பெற்றுகொண்டு சைவாநுட்டான சீலராய் விளங்குகின்றவர்கள் அநேகர்.

பத்தாம் அதிகாரம் முற்றுப் பெற்றது.

பதினோராம் அதிகாரம்

சிவபூசை

ஐயா அவர்கள் நடோறும் வைகறைக் காலத்தில் எழுந்து சிவத்தியான முதலியன முடித்துக் கொண்டு, தடாக முதலியவற்றிற்குப் போய் தந்த சுத்தி முதலியவை முடித்துக் கொண்டு, ஆசார ஸ்நாநஞ் செய்து மடிதரித்து வீபூதி உத்தூளனம் திரிபுண்டரந் தரித்து அனுட்டானம் முடித்துக் கொண்டு உருத்திராக்ஷ மாலை யணிந்து ஸ்ரீ பஞ்சாட்சரஞ் ஜெபித்து, பத்திர புஷ்பம் திருமஞ்சனம் முதலிய பூசோபகரணங்களைச் சேகரித்துக் கொண்டு, பார்த்திப ரூப சிவலிங்கம் பாணித்துக் கொண்டு, சிவாகம முறைப்படி சூரியபூசை துவாரபூசை செய்து பூத சுத்தி அந்தர் யாகம் ஆத்மசுத்தி மந்திர சுத்தி, ஸதான சுத்தி, திரவிய சுத்தி, லிங்கசுத்தி, என்னும் பஞ்ச சுத்திகளுஞ் செய்து ஆதார சத்தியாதி, சத்திபரியந்தம் ஆசனங் கற்பித்து, மூர்த்தி நிவேசனஞ் செய்து தண்டபங்கி முண்டபங்கி, வத்திரபங்கி கலாபங்கி, முதலிய நியாசங்கள் செய்து, வித்தியாதேகம் பாவித்து ஆவாகனாதி பத்துச்சம்ஸ்காரங்களுஞ் செய்து, திருமஞ்சன மாட்டி திருவொற்றாடை சாத்தி, பட்டாடை திருநீறு சந்தனக் குழம்பு திருவாபரணம் புஷ்பம் முதலியன சாத்தி பாத்தியாசமன அர்க்கியங் கொடுத்து அர்ச்சனை செய்து, லயாங்க போகாங்க பூசை செய்து புஷ்பாஞ்சலி செய்து நிவேதன முதலியன செய்து தூபதீப கற்பூரராத்திரிகம் காட்டி, அர்ச்சனை செய்து பூஷ்பம் சாத்தி, ஜெபம் ஜெபகர்ம நிவேதனம் ஆத்ம நிவேதனம் தோத்திரம் முதலியன செய்து, பிராத்தித்துப் பூசை செய்வார்கள். அவர்கள் பிரார்த்திக்கும் போது சிவநாமம் பல சொல்லி ஆராமையோடும் "சுவாமி! சைவ சமய வுண்மைகளும் தேவராதி திருமுறைகளும் சித்தாந்த சாஸ்திர படனங்களும் அபிவிருத்தியாக வேண்டும். இவைகளே அடியேனுக்கு வேண்டுவன" என்று விண்ணப்பித்து ஸ்தோத்திர முதலியவை செய்து சண்டேஸ்வர வழிபாடுடன் பூசை முடிப்பார்கள்.

இப்படிக் கிரியா காண்ட விதிப்படி பூசை செய்து வந்த ஐயா அவர்கள், சூரியனார் கோயில் ஆதினம் குருமூர்த்திகளுடன் கலந்து வந்த பின் வாதுளாகம ஞான பூசா விதிப்படலத்திற் கூறியபடி ஞான பூசையாக ஆன்மார்த்த பூசை செய்து வந்தார்கள்.

இவ்வாறு பூசை செய்யும்போதும் ஜெபஞ் செய்யும் போதும் தோத்திரஞ் செய்யும் போதும் பார்த்தால், ஸ்ரீ அப்பமூர்த்திகள் போல் சிவ வேடப் பொலிவுடன் இருக்கின்ற அழகும், நிர்மலாந்தக் கரணராய் விளங்குகின்ற காட்சியும்; ததும்பிப் பொழிந்து கொண்டிருக்கின்ற ஆனந்த பாஷ்பமும், அன்புமயமான சிவானந்தப் பெருஞ் செல்வராக விளங்குகின்ற தோற்றமும்; பார்க்கின்றவர்களுக்கு மனம் உருகி அன்போடு ஆனந்த வெள்ளம் உண்டாகாமலிராது.

நாடோறும் திருநீற்றுப்பதிகம், திருநெடுங்களப் பதிகம், திருநீலகண்டப் பதிகம், திருவதிகையிற் சூலை நோய் தீர்த்தருளிய திருப்பதிகங்களும், கார்த்திகை நட்சத்திரந்தோறும் "கந்தர் கலி வெண்பா" "கந்ரனுபூதி கந்தரலங்காரமும்" பாராயணஞ் செய்து வருவது வழக்கம்.

பதினோராம் அதிகாரம் முற்றுபெற்றது.

பன்னிரண்டாம் அதிகாரம்

நிரதிசயானந்தப் பெரும்பேறு

ஐயா அவர்கள் சிதம்பரம் மெய்கண்ட சித்ததாந்த வித்தியாசாலை யபிவிருத்தியின் பொட்டு எட்டாவது அதிகாரத்திற் சொல்லியபடி விளை நில முதலியவைகளும் முன்னரே சேர்த்து வைத்திருந்தும், மேலும் அபிவிருத்தியின் பொருட்டுப் பொருள் வருவாய் நோக்கி பிரமோதூத வருடம் ஆவணி மாதம் 15ம் தேதி (1930) சிதம்பரத்திலிருந்து புறப்பட்டு காரை மாநகருக்கு வந்து அறுபத்து மூவர் மடாலயத்திலிருந்து கொண்டு, தர்ம சீலர்கள்பால் பொருள் சேகரித்துக் கொண்டும், தாம் முன்பு இயற்றியுள்ள "திருவாரூர்த் திரிபந்தாதிக்கு" அரும்பதவுரை எழதிக் கொண்டும், வந்த மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டும், வெளியூர்களுக்குப் போய்வந்து கொண்டுமிருந்தார்கள்.

அப்படியிருக்கும் நாளில்; பிரமோதூத வருடம் கார்த்திகை மாதம் 17ம் தேதி (1930) அன்று காரைக்குடியில் திருமடத்தில் ஐயா அவர்களுடைய திருமேனிக்குச் சிறிது அசௌக்கியம் ஏற்பட்டது.

அப்பொழுது ஐயா அவர்கள் குமாரர் திருநாவுக்கரசு செட்டியாரும் குமாரத்தி முதலியோரும் மற்றுஞ்சுற்றத்தார்களும் வந்து பார்த்து முத்துப்பட்ணத்துக்குச் சொந்தக் கிருகத்தில் வந்திருந்து சௌக்கியஞ் செய்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். ஐயா அவர்களுக்கு அதில் நோக்கமில்லை. அந்தச் சமயம் ஐயா அவர்களுடைய மாணாக்கர்களும், அன்பர்களும் சில பெரியோர்களும் சமாதானஞ் சொல்லிக் கேட்டுக் கொண்டதற் கிணங்கி, ஐயா அவர்கள் முத்துப்பட்டணத்துள்ள சொந்தக் கிருகத்திற்கு வந்திருந்தார்கள்.

அப்போது, ஆயுர்வேத வைத்தியராகிய வெங்கடசாமி நாயுடு அவர்கள் முதலியோர் மிகுந்த அபிமானததுடன் அடிக்கடி வந்து பார்த்து வந்தார்கள். புத்திரர், புத்திரி, மாணாக்கர், அன்பர் முதலியோர் பக்கத்திலேயே இருந்து வேண்டிய பணிவிடைகள் செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது உண்மைத் தொண்டர்கள், ஐயா அவர்களை நோக்கி "உடம்பு மெலிவாக இருக்கிறதே" என்று கூற, "மெலிய வேண்டியதுதானே" என்று சொல்வார்கள். மற்றுஞ் சில மாணாக்கர்கள் "இன்னுஞ் சில காலம் திருமேனி பூமியிலிருக்க வேண்டும்" என்று சொன்னால் "திருவருள்" என்று சொல்வார்கள்.

இவ்வாறு திருவருட்பிரகாச வெள்ளத்துண் மூழ்கினவர்களாய்த் தேவார முதலிய திருமுறைகளை ஓதும்படி செய்து சிரவணானந்தஞ் செய்து கொண்டிருந்து, பின்பு, திருக்கோவையார் என்னுந் திருமுறையைப் பலமுறை ஆதியிலிருந்து அந்தம்வரை ஓதச் செய்து, நிச்சலனமாகச் சிவானந்த அனுபவ நிலையிலிருந்து வந்தார்கள். எப்பொழுதும் விபூதி உருத்திராக்ஷதாரணராய்க் கை குவித்துக் கொண்டு, சிவத்தியானம் அந்தரியாக பூஜை சிவநாமோச் சாரணத்துடன் இருந்தார்கள். பக்கத்திலிருந்த மாணாக்கர் முதலியவர்களுக்கு முடிந்த வாக்கியமாக "எல்லாம் ஒன்றே தில்லைச் சிற்றம்பலத்துள்" என்று சொன்னார்கள்.

ஐயா அவர்கள், வயசு 74 வருடம் 4 மாதம் 9 நாள் ஆகிய காலம் பிரமோதூத வருடம் கார்த்திகை மாதம் 28ம் தேதி (1930)

சனிக்கிழமை உத்திர நக்ஷத்திரமும், அமரபக்ஷ நவமி திதியுங்கூடிய புண்ணிய காலத்தில் உதயாதி சயஅ நாழிகையளவில், பக்தர்களும் புத்திரர், மித்திரர், மாணாக்கர்களும், தொண்டர்களும் பக்கத்திலிருந்து. சிவநாம கோஷம் செய்து கொண்டிருக்க, நிரதிசயானந்தப் பெரும் பேறாகிய சிவனடி நிழலிற் சேர்ந்தார்கள். சிவபதம் பெற்றமை உடனே எல்லாருக்கும் தெரிவிக்கலாயிற்று.

மறுநாட்காலையில் உள்ளூரிலிருந்தும் அயலூரிலிருந்தும், பெரியோர்களும். வித்துவான்களும், சிவநேசர் திருக்கூட்டதார்களும், மாணாக்கர்களும், நண்பர்களும், நகரத்தார்களும், மற்றும் யாவரும் வந்து குழுமினார்கள். ஐயா அவர்கள் தமக்குத் தகனக் கிரியையே செய்ய வேண்டுமென்று முன்னதாகவே உற்றவர்களிடத்தில் சொல்லி வைத்திருந்தமையால், அதற்குப் பொருத்தமாக ஸ்ரீ நிரம்ப வழகிய தேசிகர் வகையிலுள்ள குருசாமி பண்டாரத்தார் முதலியவர்களால் சூர்னோற்சவாதி கிரியைகள் செய்து, ஐயா அவர்களின் திருமேனிக்கு விதிப்படி அபிஷேகஞ் செய்து, சிதம்பரம் மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலைத் தரும பரிபாலகர்களால், கொண்டுவரப் பெற்ற பட்டாடை தரித்து, விபூதி உருத்திராக்ஷம் அணிந்து, மலர் மாலைகளால் அலங்கரித்து உன்னத பீடத்தில் வைத்து முற்கூறிய வித்துவசிரோமணிகளும், சிவநேசர் திருக்கூட்டத்தார்களும், பத்திராதிபர்களும், மாணாக்கர்களும், நண்பர் முதலியோர்களும், தத்தம் அனுதாபங்களைக்காட்டி ஐயா அவர்களுடைய கீர்த்தி, அருமை பெருமைகளைப் பாராட்டி புகழ்ந்து பேசினார்கள். சிலர் செய்யுட்களியற்றியும் தோத்திரஞ் செய்தார்கள். பின்பு ஐயா அவர்களுடைய திருமேனியை விசித்திராலங்காரமான புஷ்பப் பல்லக்கில் ஏற்றி அலங்கரித்துச் சுற்றத்தவர்களும், பக்த சிகாமணிகளும், மாணாககர்களும் திருமுறைகளைப் பாராயணஞ் செய்துகொண்டு தாங்கிவர, உருத்திர பூமியிலெழுந்தருளச் செய்து, நிருவாண அந்தியேஷ்டி இயற்றி, புத்திரர் திருநாவுக்கரசு செட்டியார் பிதிர்கருமஞ் செய்து முடிக்க, சிவாக்கினி தகன காரியஞ் சிறப்பாக நடைபெற்றது.

பாஷாணஸ்தாபனம் முதலிய கிரியைகளும், சிவாகமபத்ததி விதிப்படி பத்து நாளும் முறையே நடைபெற்றன. சாதியாசாரப்படி, கிருகத்தில் செயற்பாலனவாகிய கிரியைகளுஞ் செய்யப்பெற்றன.

பதினாறாம் நாள், பெரியோர்களும், வித்துவசிரோமணிகளும், மாணாக்கர்களும், சுற்றத்தவர்களும், ஆங்கு சபைகூடி ஐயா அவர்களுடைய உத்தம குணங்களையும் சற்காரியங்களையும், கீர்த்திகளையும், புகழ்ந்து பேசிப் பாராட்டி உபந்நியாசஞ் செய்து வாழ்த்தினார்கள். அச்சமயம் அயலூரிலிருந்து வந்த அநுதாபக் கடிதங்கள் வாசித்துத் தெரிவிக்கப் பெற்றன.

பின்பு, இருபத்தோராவது நாள், ஐயா அவர்களின் புத்திரர் முதலானவர்களும், சிவநேசர் திருக்கூட்டத்தாரும், மாணாக்கர்களும், நண்பர்களும், சுற்றத்தார்களும், சிதம்பர தலத்திற்குச் சென்று, அங்கு நிறுவப் பெற்ற மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையிலிருந்து ஶ்ரீமந் நடராஜப் பெருமானுககுப் பாவாடை நைவேத்தியம், கோபுர தீப முதலியன சிறப்புற நடாத்தினார்கள். அந்தச் சமயம் மார்கழி ஆருத்திரா தரிசனத்தின் பொருட்டு வந்திருந்த சிவநேசர் திருக் கூட்டத்தாரும், வித்துவசிரோமணிகளும், மாணாக்கர்களும் சபை கூடியிருந்து பஞ்சாக்ஷரபுரம் உயர்திரு வாலையானந்த சுவாமிகள் தலைமையில், ஐயா அவர்கள் சைவ சமயத்தில் உறைத்து நின்ற, தீரத்தையும், சிவபக்திமீக்கூர்ந்த அருமையையும், அவர்களுடைய, குணாதிசயங்களையும், அவர்கள் சைவ சமயாபிவிருத்தியின் பொருட்டுச் சிரத்தையுடன் செய்து வைத்திருக்கின்ற ஏற்பாடுகளையும், கீர்த்தியையும் புகழ்ந்து பாராட்டி உபந்நியாசஞ் செய்து வாழ்த்தினார்கள். அந்தச் சமயத்தில் ஐயா அவர்களின் ஞாபகார்த்தமாக சொக்கலிங்க புத்தக நிலையம் என ஒரு புத்தக நிலையம் மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையில், பிரமோதுதவருடம் மார்கழி மாசத்தில் (1930) ஸ்தாபனஞ்செய்து, சென்னிமலை சிவத்திரு சுப்பிரமணிய சிவாச்சாரியரவர்களால் திறந்து வைத்து விளங்கிவருகிறது.

பின்னர், ஐயா அவர்களுடைய புத்திரர், சிவநேசர் திருக்கூட்டத்தார், மாணாக்கர், சுற்றத்தார் முதலானவர்களும் தங்கள் தங்கள் ஊர்களுக்கு வந்து ஐயா அவர்களின் திருவுருவப்படங்களை அவரவர்கள் இல்லங்களில் வைத்துப் பூஜித்துக்கொண்டு சுகவாழ்வு பெற்று வருகின்றார்கள்.

ஐயா அவர்களின் குருபூஜை சிதம்பரம் மெய்கண்ட சிந்தாந்த வித்தியாசாலையிலும், காரைமாநகரில் அறுபத்து மூவர் குருபூஜை மடத்தில் திருநாவுக்கரசு செட்டியாராலும் சிரத்தையுடன் நடைபெற்று வருகின்றது.

ஐயா அவர்கள், எ ய ச வயசு வரை சிவப்பழமாகவிருந்து, சுத்தாத்துவித சைவ சித்தாந்த உண்மை நிலையில் பிறழா துறைத்து நின்றதீரமும், அம்மாணெறியைத் தம்பால் அடுத்தவர்களுக்குப் போதித்துச் சிவநெறி நாடச்செய்த அருமை பெருமைகளும், மிகவும் போற்றத்தக்கனவாகும், ஐயா அவர்கள் இந்தச் சைவ உலகில் புகழுடம்புடன் மிகுந்த நன் மதிப்புடையவர்களாக விளங்கி வருகின்றார்கள்.

சுபம்! சுபம்! சுபம்!

எங்கும் பொழில் விரியுந்திருக் காரைநக ரினைச் சார்ந்
தியயுந்திரு வுருமானிட னெனவேவரு கோமான்
தங்கும்பெருங் கல்விக்கட றனையுண்டுபெய் மேகம்
தடையேதுமின் றெழுவாக்கினன் றகுபோதகந் தரு வோன்

சங்கையறச் சைவம்நிலை நாட்டுமொரு சதுரன்
தவமாஞ்சிவ பூசைபுரி தனிமாதவ சீலன்
நங்கள்குரு நாதன்மது ரேசன்றிரு நாமம்
நலனேதரப் புனைந்தோன்பதமலர்நாடொறுநமப்பாம்

சீருற்ற வெங்கள்குரு நாதன் சீர்த்தி
சிறந்தினிதிவ் வுலகின்க ணென்றும் வாழி
நேருற்ற வவ்வழியி னடியார் வாழி
நிலவு சிவ நேசர் திருக் கூட்டம் வாழி

பாருற்ற மெய்கண்ட சித்தாந் தப்பேர்
பரவி வளர் வித்தியா சாலை வாழி
ஏருற்ற சிவசமய மென்றும் வாழி
இன்பமுறு சாதனமைந் தெழுத்தும் வாழி.

சுபம்.

ஐயா அவர்களின் சரித்திரம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

ஐயா அவர்கள் இயற்றிய நூல்களின் அட்டவணை.

1. வன்றொண்ட குருஸ்துதி
2. ஆறுமுகநாவல குருஸ்துதி
3. மெய்யப்ப சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி
4. மெய்யப்ப சுவாமிகள் சரித்திர சங்கிரகம்
5. திருவுசாத்தானமாகிய சூதவன புராணம்
6. திருவுசாத்தானமாகிய சூதவன புராணவசனம்
7. திருப்புத்தூர்ப் புராணம்
8. பெருந்தோட்டத்து அத்தீச்சுர புராணம்
9. சோழபுர புராணம்
10. சித்தவடமான்மியம்
11. தில்லைவளாகமென்கிற ஆதிசிதம்பர மான்மியம்
12. திருக்கழுக்குன்ற மகிமாசங்கிரகஸ்தவம்
13. மாணிக்கவாசக சுவாமிகள் புராணவசனம்
14. திருத்தொண்டர் புராணசார விளக்கம்
15. திருநாவுக்கரசு சிவசரித்திரத் தெளிவு
16. சிவசுந்தர சாயாரூப சிவமகிமா சங்கிரகம்
17. உண்மை நாயன்மார் மகிமை
18. சேக்கிழார் புராணவசனம்
19. நம்பியாண்டார் நம்பிகள் சரித்திரம்
20. மெய்கண்ட சிவசரித்திரம்

21. ஆதிசைவ குலமான்மியம்
22. முத்தைய மான்மியம்
23. முத்தைய ஸ்தோத்திரம்
24. மகுடதனவைசிய மரபு விளக்கம்
25. அளகை கற்பகவிநாயகர் பதிகம்
26. கணேசநகர் மருதீசர் பதிகம்
27. கணேசநகர் வாடாமலர் மங்கைபதிகம்
28. ஆதிகிதம்பரேசர் பதிகம்
29. சிவகாமியம்மை பதிகம்
30. திருத்தொண்டர் பதிகம்
31. திருப்புலீச்சரம் யௌவநாம்பா பதிகம்
32. திருவீங்கோய் நாதர் பதிகம்
33. வளைகுளம் திருநாகேசுரர் பதிகம்
34. காரைநகர் மீனாக்ஷியம்பா பதிகம்
35. கானாடுகாத்தான் சுந்தரவிநாயகர் பதிகம்
36. தில்லைவளாகம் நடேசர் பதிகம்
37. ஆத்தன்குடி மீனாட்சிசுந்தரேசுவரர் சந்தப்பதிகம்
38. ஆத்தன்குடி மீனாட்சியம்பா கலித்துறைப்பதிகம்
39. போக்கலைச் செல்வவிநாயகர் பதிகம்
40. காசிவிஸ்வேசர் அடைக்கலப்பதிகம்
41. சோமசுந்தர மாலை
42. சவுந்தரேச தயாநிதி மாலை
43. குமரநாயக மாலை
44. வீரசேகர மாமணி மாலை
45. போக்கலை குமரேசர் சோடச மாலை
46. சிற்சபேசர் விண்ணப்ப மாலை
47. வடிவழகி நவமணி மாலை
48. மதுரைச் சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை
49. சாக்கைத் திருவிரட்டை மணிமாலை
50. அளகாபுரி மீனாட்சி சுந்தரேசுரர் திருவிரட்டைமணிமாலை

51. முத்தல நாயக மும்மணிக் கோவை
52. கணேசமா நகர் கற்பக விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி
53. திருவாரூர்த் திரிபந்தாதி
54. திருவாலவாய் யமகவந்தாதி
55. பசுவந்தனை வெண்பாவந்தாதி
56. குன்றைச் சிலேடை வெண்பா
57. சீகாழி ஞானசம்பந்தர் லீலாசங்கிரகச் சிலேடை வெண்பா
58. தில்லைச் சிவகாமசுந்தரர் சிலேடை வெண்பா
59. திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் போற்றிக் கலிவெண்பா
60. சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்
61. திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்
62. திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ்
63. சுந்தரமூர்த்தி பிள்ளைத்தமிழ்
64. மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ்
65. மயின்மலைச் சந்தவிருத்தம்
66. காரை நகர் மீனாக்ஷிசுந்தரேசர் திருவூசல்
67. பசுவந்தனைத் திருவூசல்
68. திருஞானசம்பந்தர் திருவூசல்
69. போக்கலை வள்ளிமணவாளர் திருவூசல்
70. ஸ்ரீ உமாவீரசேகரர் துவாதசமஞ்சரி
71. சபாபதிப்பிள்ளையவர்கள் துவாதசமஞ்சரி
72. வேதவனேசஸ்தவம்
73. திருப்பூலீச்சரம் யௌவநேச நமகம்
74. வீரகத்தி மோசக விநாயக நாமசோடச நமகம்
75. தில்லை நடேச சிவாஷ்டகம்
76. பெரியபுராணப் பிரசங்கவைபவம்
77. தோத்திரப் பாடல்கள்
78. திருஞான சம்பந்தர் திருவெழுச்சி
79. சிவநாம வணக்கம்

80. சிவதயை வணக்கம்
81. சிவபக்த நாமாவளி
82. அருச்சனைப் பத்து
83. வேதாந்தம்
84. காஞ்சி வாசியாரின் மாயாவாதக் கோண்மறுப்பு
85. தூர்வை யாசகப் படலம்
86. தக்ஷகாண்டம் உபதேசப் படலம்
87. அசுர காண்டம் உபதேசத் திரையம்
88. வேதாந்தத் தெளிவு
89. சிவஞான போதார்த்த லெகுவசனம்
90. சிதம்பர சிவாலயம்
91. மன்னுதை விகவிய லின்னிசைத் தமிழ்மொழி
92. உண்மை நோக்கம்
93. வேதாந்த வியல்பு
94. கோபி சந்தன வரலாறு
95. சிவாலய பூசாந்தர ஆசீர்வாத உபசார முறை
96. சைவசமய உண்மை
97. தேவாரம் என்னும் சொற்பொருள்
98. விஷ்ணு மூர்த்தியும் விஷ்ணு பக்தர்களும் விபூதி தாரணர்களே
99. விபூதி தாரணத்துடன் செய்யுங்கருமங்களே பலன்தரும்
100. பிரணவப் பொருள் சிவபரமேயாம்
101. சிவன் ஒருவனே பசுபதி
102. வேத சிவாகமங்கள்
103. வேண்டுகோள்
104. வேண்டிக்கோடல்
105. மெய்ம்மை விளக்கம்
106. மாயாவாதிகண்மாற்றம்
107. மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை
108. தனித்தனியுள்ள சில பல பாடல்கள்

அனுபந்தம்

சென்னிமலை

ஈசான சிவாச்சார்ய சுப்பிரமணிய சிவாச்சார்யாரவர்கள்

நமது ஐயா அவர்கள் பிரிவு துக்கம்! துக்கமே என் செய்வோம் நமது மெய்யன்பராகிய ஐயா அவர்கள் புறச்சமய நிராகரணமும். சைவ சமயஸ்தாபனுமும், ஓவாது செய்து வந்து அதன் பயனாகிய சித்தாந்த சைவ முத்தியெனப் பெருஞ் சிவனடியைச் சேரு முத்தியிற் கலந்து குஞ்சித்த சேவடியைக் கும்பிட்டேயிருப்பரெனினும். இன்னுஞ் சில காலம் அளவளாவிக்களிகூர்ந்து வதியும் பேறு எங்கட் கிலதாயிற்றே. சிவ சங்கற்ப மதுவாயின் ஆயக்கட வேனானோதான் என்ன தோவிங்கதிகாரம்! என்னுந் திருவாக்கைச் சிந்தித்து ஒருவாறு தேறித் திருவருளை முற்கொண்டு, ஐயா அவர்கள் மேற்கொண்ட சித்தாந்த சைவ சமய பரிபாலன சற்கருமத்தைச் செல்லும் வாயெல்லா மொல்லும் வகையாற் செய்து, சாலவருள் சுரக்குஞ் சீல முடையன்றாள்களோவாது பொறுக்குங் சங்கரனடியரைச் சந்ததம் வந்தித்தின்ப வாழ்வுறுதலே யெங்களுக்கேற்றதாம்.

சென்னை மஹாமஹோபாத்தியாயர்

உ.வே. சாமிநாதய்யரவர்கள்.

சிவபக்த சிகாமணியாக விளங்கிய ஐயா அவர்கள் சிவபதம் அடைந்தமை தெரிந்து மிக்க வருத்தமடைகின்றேன். அவர்களுடைய ஆன்மா நல்ல பதவியையடையு மென்பதிற் சந்தேகமில்லை.

சூரியனார் கோவில் ஆதீனம்

இலக்கணச் சுவாமியென்கிற முத்துக்குமார சுவாமிகள்

பொன்னார் திருச்சிற் றம்பலத்துட்
பொருள்சேர் புகழிற் சிறந்தோங்கும்
என்னா யகமே நடராஜ
ராஜ வள்ளா லென்றுதினம்
துன்னா வுனது திருவடியே
தொழுஞ்சொக் கலிங்க வையாவை
அன்னோ கயிலைக் கழைத்தனையே
யழகோ விதுவும் புகழாமோ.
உன்றன் புகழே ஞாலமிசை
யோங்கி வளரச் செய்யுமதே
என்றன் விருப்பமிதன் பொருட்டா
விருக்கப் புவியிற் சிலகாலம்
மன்ற வருள்கென் றிறைஞ்சியுனை
மகிழ்சொக் கலிங்க வையாவை
நின்ற கருணைத்திரு நடஞ்செய்
நிமலா நின்பா லழைத்தனையே.
நின்றனக் கீந்ததிரவியந் தன்னை
நீணில மாந்தர்தாங் கொள்ளின்
துன்றுவர் தீவாய்நரகெனும் பாடல்
சொல்லுமெஞ் சொக்கலிங்க கையா
மன்றுளே நடஞ்செய் மாப்பெருங்
கருணை வள்ளலே மன்னுமப்பாடல்
என்றனக் குரைப்ப நாதனேயொருநா
ளிங்குவந் திடவருள் வாயே.
வெண்ணெய்நல் லூரிற் சென்றுமெய்
கண்ட வியன்குரு சந்நிதிவணங்கி

அண்ணனீ யருள்செய் புனிதவத்
துவிதமானசித் தாந்தமே பரப்பும்
எண்ணமே யுடையே னருளெனப்
போற்றி யிரசிதகலசமுஞ் சாத்தி
வண்ண நீ றணிசொக் கலிங்கவை
யாவை மறைத்தியோ மன்றுளாரமுதே.

பூதல மேங்குஞ்சிவநெறி வளர்க்கும்
புந்தியாற் சொக்கலிங் கையா
மேதக வளர்மெய் கண்டசித்தாந்த
வித்தியா சாலைநின் றில்லை
மீதமைந் ததுநின்றிவுருள மறியும்
விளம்புமஃ தங்கன நடக்க
நாதமுங் கடந்தவெளியிலே நடஞ்செய்
நம்பனே நல்லருள் செய்யே.

தூய நெறியார் சொக்கலிங்க வையா நின்
பாய கருணைப் பழம்புகழே பாடியதால்
வீய மலமுன்று மேலா முனதடிக்கீழ்
ஆய சுகமே யருளம் பலத்தமுதே.

பலவான்குடி திருவாசக மடாலயம்

உயர்திரு பொன்னம்பலசிவம் அவர்கள்.

தென்னாட்டிற் காரைநகர் தனில்வணிக
குலமணியாய் செனித்துச் சைவ
வின்னாட்டுஞ் சொக்கலிங்க ஐயா என்
றுலகுபுகழ் மேலோய் நீதான்
இந்நாட்டிற் சைவமதை யஞ்சாத
நெஞ்சமுட னிசைத்தாற் போலப்
பொன்னாட்டுப் புலவருக்குப் போதிக்கப்
போயினையோ புகலு வாயே.1

தேவார திருவாசக காதிகளே
தினம்புகலுஞ் செவ்வா யெங்கே!

பூவாரும் வெண்ணீறு பூத்தொளிரு
முகமெங்கே! பொருகூட் டத்துட்
சேவேறு மெஞ்சிவனே பரமென்ன
மேலுயர்த்துந் திருக்கை யெங்கே!
காவாகுஞ் சொக்கலிங்கக் கண்ணேநீ
கயிலையடைந் தாயே அந்தோ! 2

புறச்சமய வுடுமழுங்க எழுந்தபூ
ரணமதியே! புனித சைவர்
சிறப்புறுதா மரைமுகங்கள் செழித்தலரத்
தோன்றியசெங் கதிரே! சைவ
நெறிப்பெரியோய்! சொக்கலிங்கத்திருப்பெயரோய்!
நீயின்று சிவன்மு னெய்தி
அறக்கொடிய நாத்திகரா லுலகுபடும்
பாட்டையுரைத் தருள்செய் வாயே! 3

அண்ணாமலை நகர்

சர்க்கரை, இராமசாமிப் புலவர் அவர்கள்

நமது மாக்ஷிமை தங்கிய சைவசித்தாந்த பானுவாய் சைவசமய பரிபாலகராய் சிவபூஜா துரந்தரராய் அருங்கலை விநோதராய் விளங்கிய ஐயா அவர்கள் சிவாசாயுச்சிய மடைந்தமை அறிந்து ஆற்றொணாத் துயர் அடைகின்றனன். ஆனால் அவர்கள் மேற்கொண்ட பதி புண்ணியங்களெல்லாம் சீர்பெற நடைபெறு மென்னும் துணிவினால் ஒருவாறு மனந்தேறியுள்ளேன், ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை யாதிய தர்மாபி விருத்திகருதி ஸ்ரீ சிற்சபாநாதன் குஞ்சித சரணாம்புயத்தை அநவரதமும் சிந்தித்து வந்திக்கின்றேன்.

ஐயா அவர்களின் மாணவர்

காரைக்குடி, அரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்

பிரமோதூத ஆண்டில் செட்டிமார் நாட்டுச் சரித்திரத்தில் ஐயா அவர்கள் பிரிவு பெரியதோர் நிகழ்ச்சியாகும். இந்நாட்டுச் சரித்திர புருஷர்களில் அவர்கள் ஒருவராவர். இந்நாட்டுக் கல்விமான்களில்

அன்னார் ஒரு பெரியவராவர். அவர் பிரிவை இங்கு வருணித்து எழுதுகின்றேன்.

கார்த்திகைத் திங்கள் பிறந்தது. இருபத்தி எட்டாம் நாள் நண்ணிற்று. மாலை நேரம் வந்தது. கதிரவனும் மறைந்தனன். காரிருள் சூழ்ந்தது. நள்ளிரவு (Dead Night) தோன்றிற்று. நானிலம் மயங்கியது, மேனிலம் விளங்கியது. ஐயா அவர்களின் வாழ்க்கை கடிகாரத்தில் மணி பன்னிரண்டு ஆயிற்று. ஆன்மாவாகிய நிமிஷ முள்ளும், இறைவனாகிய மணி முள்ளும் ஒருநிலை யெய்தின. உரிய நேரம் கிட்டிவிட்டது எனக் காட்டின. ஒரு மணி ஐந்து நிமிஷத்தில் இரண்டும் ஓர் மணியாயின. பிரிவிலா நிலைபெற்றன. பின்னிக் கலந்து பேரின்பமுற்றன. பேச்சு மூச்சு இல்லை. கடிகாரத்தின் இயக்கமும் முடிந்தது. கொடுத்த சாவியும் பூர்த்தியாகி விட்டது. கடிகாரம் தன்னாலியன்றவரை நெடுநாள் தொண்டு செய்தது. ஓய்வு பெறுதலைப் பெரிதும் அவாவிப் படைத்தோனை வேண்டி நின்றது. எனவே அப்பொழுது சாருமிடத்தைச் சார்ந்தது. உண்மையுடனும் ஊக்கத்துடனும் எழுபத்துஐந்து ஆண்டுகள் உழைத்த நற்கடிகாரம், செப்பனிடுவோரைச் செப்பனிடும் செம்மல் (Repairer of Repairers) பால்போந்தது. அன்பர்க்கு அன்பரது வாழ்வில் ஓர் முற்றுப்புள்ளி பொறிக்கப்பெற்றது. அன்பர்கள் பாடுகின்றனர். பரவுகின்றனர். பரிந்துருகுகின்றனர். சிவநாம முழக்கம் செய்கின்றனர். யாண்டும் தேவார, திருவாசக ஓசை.

அந்தோ ! இவ்வுயரிய நன் மணிகாட்டியை யாவரே பிரிய மனங்கொள்வர். அன்பர்கள் அலமந்து, உணர்விழந்து வாடிக்கிடக்கின்றனர். உறக்கம் இல்லை. உளம் சோர்கின்றது. இவ்வாறு பாழும் இரவு கழிகின்றது. விடியல் வேளை வருகின்றது. வெளிச்சம் தோன்றுகின்றது. அருணன் உதிக்கின்றனன். கொடிய செய்தி கேளுங்கள். என்று கோழி கூவுகின்றது. அன்பர்கள் எழுந்து ஒருவர் பின் ஒருவராக வருகின்றனர். பார்க்கின்றனர்; பதறுகின்றனர்; பணிகின்றனர்; சூரியன் புறப்படுகின்றான். பிரயாணம் ஆரம்பமாகின்றது. கார்கள் ஓடுகின்றன. கடிதில்

அயலூர் அன்பர்கள் அறிந்து. ஊர்ந்து காரைக்குடிக்கு வருகின்றனர். வருந்துகின்றனர். வாழ்த்துகின்றனர். பட்டும், பூவும், சந்தனமும், திருநீறும் சாத்துகின்றனர். உரைமலர்களும் பாமலர்களும் பரிந்தணிவிக்கப் பெறுகின்றன. புஷ்பப் பல்லக்கில் ஐயா அவர்களின் உடலை எடுத்துச் செல்லப் பெறுகிறது. அனைவரும் அதனைத் தாங்கிச் செல்கின்றனர். ஆண்களும் பெண்களுமாக அன்பர் யாவரும் அரஹர முழக்கம் செய்துகொண்டு போகின்றனர். மேற்றிசை ருத்ர பூமியில், செழுஞ்சோதியில் சேர்ப்பிக்கின்றனர். விடைதந்து வாழ்த்துகின்றனர். மணியும் நான் காகின்றது. கதிரவனும் காணாமை பெறும் வழியே ஏகுகின்றான். யாவரும் வாடிய உடலுடன், உலர்ந்த உளத்துடன் உருகிய உயிருடன் வீடு திரும்புகின்றனர்.

அந்தோ ! முத்துப்பட்டணம் பொலிவிழந்திருக்கிறது. காரைக்குடி அறுபான்மும்மை நாயன்மார் திருமடமும், சிவன் கோவில் மேலரத வீதியும், மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையும் ஐயா அவர்களை இழந்து, வறிதே வெறுங்காட்சி அளிக்கின்றன. கோபுரத்தில் திருவிளக்குப் பொலிகிறது. நடராஜர் ஆனந்தக் கூத்தாடுகிறார். அன்பர்கள் வருந்தியும் வாழ்த்தியும் பாராட்டி மகிழ்கின்றனர். செட்டிமார் நாட்டுப் பெருந்தரு சாய்ந்து விட்டதே! செந்தமிழும், ஜீவகாருண்யமும், சைவமும் பூத்துப் பொலிந்து கொண்டிருந்த பைந்தரு நீங்கி விட்டதே ! என்று கூறுகின்றனர். நெடுநாள் செய்த தொண்டினை நினைந்து ஒருவாறு ஆறுதல் பெறுகின்றனர். ஐயா அவர்களும் சிதம்பரத்திற்கு 30ம் தேதி வருவேன் என்று தாம் எழுதிய கடிதப்படி தில்லை வெளியிற் புகுந்து விட்டனர். சைவப்பெருஞ் சொன்மழை ஓய்ந்து விட்டது. பூஜைக் கட்டும் கிணறும் உறங்குகின்றன. பூந்தோப்பில் புஷ்பங்கள் வாடிக்கிடக்கின்றன. வில்வதளம் உதிர்ந்து உலர்கின்றது. மணியும் அயர்ந்து உறங்குகின்றது. திரள் திரளராகப் பாக்கள் பாடிப் பதிகங்கள் புராணங்கள் எழுதும் பேனாவும் ஓய்வு பெற்றுவிட்டது.

சாய்ப்பு மேஜையும் ஊதாமைக் கூடும் உபயோகமற்றிருக்கின்றன. விண்ணப்ப மாலையுடன் வேலை பூர்த்தியாகி விட்டது. எல்லாக் கருவிகளும் உழைத்து முதிர்ந்து பென்ஷன் பெறுநிலை எய்தின. ஆ! ஐயாவின் அயரா உழைப்பை என்னென்றுபகர்வது.

ஒரு சொற்சித்திரம்

ஐயா அவர்களைப் பற்றி ஈண்டு ஓர் சொற் சித்திரம் (A Penpicture) வரையப் பெறுகிறது. சிவப்பழம், அப்பர் என்று பலரால் புகழப் பெற்றவர். பழுத்த பழம் போன்ற பொன்னிற மேனியில் வெண்ணிற நீறு திகழப் பெற்றவர். உயர்ந்த உருவம், நீண்ட கரங்கள், விரிந்த மார்பு, ஒளி பொருந்திய முகம், யாழ்ப்பாணம் தேங்காய் என அன்பரால் புகழப்பெற்றுப் பருத்து நரைத்து அறிவு முதிர்ந்த தலை, கழுத்தில் ஓர் உருத்திராக்க மணி, தூய மெல்லிய கரையில்லாத வெள்ளை உடைகள், உடலில் ஓர் வெண்ணிறப் பிளானல் போர்வை, மடியில் சம்புடமும் கைக் கடியாரமும், கால்களிற் பாதரக்ஷைகள், கையில் வெள்ளிப்பிடி பிடித்த ஒற்றைமொழிப் பிரம்பு, கம்பீரமான தோற்றம், உரத்த குரல், ஊக்கமுள்ள நடை, சிவனை மறவாச் சித்தம், உறுதியான உடல், நோயற்ற நிலை, பார்வைக்குப் பொலிவான சிவனடியவர் வடிவம், பெரும்பாலும் புத்தகமும் எழுதுகோலும் கைகளில், கண்ணுங்கருத்தும் நூலாராய்ச்சியில், கண்ணிற் கண்ணாடி, வாயிற் கட்டிய வெண்பற்கள், நிற்கும் பொழுதும் நடக்கும் பொழுதும் உட்கார்ந்திருக்கும் பொழுதும் நிமிர்ந்த நிலை, மேனி முழுதும் வெண்ணீற்றுப் பொலிவு, அழகிய வடிவம்.

ஐயா அவர்கள் என்போன்ற மாணவர்களுக்குக் கற்பித்த செந்தமிழ்த் திறத்தினை இவ்வாறு எழுதி வாழ்த்தி மகிழ்வதே உரிய கைமாறாகும்.

திருவல்லிக்கேணி

P. தியாகராஜ பிள்ளை அவர்கள்

எம்போன்றார்க்குச் சமயவாழ்வில் நேர்வழியில் செல்ல மதிபுகட்டும் துணைவராகவிருந்த பெரியார் சிவனடியிற் கலந்தனர் என்பதை அறிய நெஞ்சம் அவலம் அடைந்தது. கல்வியும் ஒழுக்கமும் ஒருங்கு வாய்ந்து சிவனடி போற்றும் இத்தகைய பெரியார் அருமையாக இருக்கும் இக்காலத்தில் இவர்களைச் சிவபெருமான் தன்னடியிற் கலப்பித்தது நமது தவக்குறையே, அவர்கள் உயிர் இரண்டற்ற நிலையை அடைய கடவுள் அருள்வாராக.

ஐயா அவர்களின் மாணாக்கர்

காரைக்குடி **சேவு.மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள்**

எனது குருநாதர் சுத்தாத்து வைத சைவசித்தாந்த சிவஞானப் பெரியாராகிய ஐயா அவர்கள் கல்வி, அறிவு, ஒழுக்கம் ஈஸ்வர பக்தியாகிய உயர் குணங்களில் மேன்மையுற்று விளங்கிய பெரியாராவார்கள். தில்லை வாணர் திருவடி மறவாச் சிந்தனையுடன் இவ்வுலக வாழ்வு நீத்துப் பேரின்பப் பெருவாழ் வுற்றார்கள். அந்தோ! எங்கள் அருமைப் பெரியாரின் அரும்பெருங்குணங்களை என்னென்பேம்!! இறைவ! உனது இன்னருளால் இத்தனை காலம் எங்கள் மன மாசகற்று மணி விளக்காக எங்களிடை வைத்து இது போழ்து உனது திருவடிக்கணியாக் கொண்டனையே!

வைதிக சைவம் வளர்க்கவந்துதித்த வள்ளால்! தனவணிக சமூகம் தகவுறக் செய்த சான்றோய்! நுண்பொருள் நிறைந்த பத்தாயிரம் பைந்தமிழ் பாக்களியற்றிய பாவல, உமது பிரிவினைக்கேட்ட உத்தமர்கள் உள்ளம் உலை மெழுகென உருகுகின்றதே, உத்தமசீல! அடியேங்கள் பொருட்டு ஒரு முறையாவது வந்து உமது திருவெண்ணீறு துதைந்த திருமுகப் பொலிவு காட்டித் திருவாய்மலர்ந்து அருளாயோ! சிற்சபேசன்றிரு

வடியையே குறித்து எங்களை மறந்து சென்றனையோ! செந்தமிழ்ப் புலவர் சிங்கமே! செந்நாப் புலவர் திலகமே!

தமிழ் உலகிற்கும் தனவணிக நாட்டிற்கும் அரும்பெரும் சைவ சமயத்திற்கும் மும்மணியாய் விளங்கிய முழுமணியே! ஒழுக்கத்தினையே உயிரினும் ஓம்பி ஒரு சிறிதும் வழுவாது உமது பதினெட்டாம் ஆண்டு முதல் நியமம் தவறாது பெரும்புலர் காலை மூழ்கிப்பித்தற்கு பத்தராகி அரும்பொடு மலர் கைக்கொண்டு ஆர்வத்துடன் சுமார் அறுபது ஆண்டுகளாக அம்மையோடப்பர் அடியிணை மலர்களைப் பூசித்துப் போற்றிய புண்ணிய மூர்த்தி! உமது திருவெண்ணீறு துதைந்த பொன்மேனியும், தாழ்வடமும், நாயகன் சேவடிதைவரு சிந்தையும், நைந்துருகிப்பாய்வது போலன்பு நீர்பொழிகண்ணும் பதிகச் செஞ்சொன்மேய செவ்வாயின் திருப்பொலிவும் இனி என்று காண்போம்! என்று காண்போம்! இறைசிவனருளிருந்தவாறென்ன!

ஆராத காதலுடன் பாடம் பயிலும் மாணவர்களுக்கு விஷயங்களைச் சலிப்பின்றி அங்கை நெல்லிபோல் நன்கு விளக்கும் அண்ணால்! அண்ணால்! எனது குருமணியே! குலமணியே! கோத்திரமணியே! சாத்திரமுரைக்கும் தமிழ்மணியே! ஆஸ்திகம் நிறுவும் ஆன்றோர் தலைவ!

நால்வர் பொற்றாளையே நற்றுணையாக் கொண்டு திருத்தொண்டியற்றும் திருக்கூட்டங்களின் பொலிவு கண்டு கண் களிப்ப மனமுவந்து கழிபேருவகையுடன் கேட்போர் உளத்தும், புறத்தும் அன்பு நெக்குருக அமுத்தமாக அஞ்சாது சிவனே பரம்பொருள். அவனருள் சைவ சமயமே சமயம் என்னும் மகா வாக்கியங்களை யாவரும்உணர ஆதாரங்களுடன் எடுத்துப் பேசி ஆர்வம் பெருக்கும் அருள்மிகு மணியே! பொருண்மிகு நிலையே! புண்ணிய முகிலே! புலவர்கள் போற்றும் பெருநாவல!

உமது கல்விப் பெருக்கம் உண்மை ஒழுக்கம் ஆசார அனுஷ்டானம் சிவபூஜா நியமம் திருவருட்டியானம், உலகெலாம்

சைவமும் தமிழும், தழைத்து உண்மையோடு சிவநெறி நின்று ஒழுகச்செய்ய வேண்டுமென்ற சிந்தைமுருகி வளர்ந்து திருத்தொண்டியற்றும் திறமையாதிய சிறப்புறு குணங்கள் அனைத்தையும் அநவரதமும் அருகிருந்து பார்க்கும் பெரும் பேறுபெற்ற எம்போலிகட்கும் ஏனைய பேரன்பர்கட்கும் எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும், இறைவனருளைக் குறித்து வேண்டி வணங்குதலைத் தவிர எதுவும் தோன்றவில்லையே! தோன்றால்! தோன்றால்!!

எல்லையில் புகழ் எம்பிரான் மன்றம் விளங்கும் தில்லையம்பதியில் பொய்கண்டார் காணாப்புநிதமெனு மத்துவித மெய்கண்டதேவர் அருட் பெயர்கொண்டு விளங்கும் சித்தாந்த வித்தியாசாலை நிறுவிய செம்மால்! செம்மால்! சிவனருள் பெற்ற தேசிகரத்தினமே! சிற்சொரூபானந்த சிவனடிக்கணியாய்ச் சென்றுறு குருவே! சிறப்புறுமணியே! திருவடி பணிந்தோம். திருவடி பணிந்தோம்.

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஐயா அவர்களின் இறங்கற் செய்தி தெரிந்து வருத்தமடைந்த ஏராளமான சைவசித்தாந்த அன்பர்களில் யுவ வருடம் ஐப்பசி மாதம் 1935ம் வருடம் வெளியிட்ட முதல் பதிப்பின் **"அநுபந்தம்"** பகுதியில் குறிப்பிட்டவர்கள்.

1. பிரம ஸ்ரீ சு.நடராஜ குஞ்சித தீட்சதவர்கள் – சிதம்பரம்
2. ஈசான்ய சிவாசார்ய சுப்பிரமணிய சிவாசார்யவர்கள் – சென்னிமலை
3. ஸ்ரீ மதம்பலவ நாவல ஞான சம்பந்த பராசக்தி சுவாமிகள்
4. பஞ்சாக்கரபுரம் – சிவஸ்ரீ வாலையானந்த சுவாமிகள்
5. சூரியனார் கோவில் ஆதீனம் இலக்கணச் சுவாமி யென்கிற முத்துக்குமார சுவாமிகள்
6. உலகநகர் சித்தாந்த சைவ நிலையம் சிவஸ்ரீ இலக்குமண சுவாமிகள்
7. அண்ணாமலை நகர் தமிழாசிரியர் சிவஸ்ரீ கந்தசாமியார் அவர்கள்
8. காளையார்கோயில் கா.செ.மடாலயம் ஜமீன்தார் அருணாசல சுவாமிகள்
9. பலவான்குடி திருவாசக மடாலயம் உயர்திரு. பொன்னம்பல சிவம் அவர்கள்

10. சென்னை மஹா மஹோபாத்தியாயர் உ.வே. சாமிநாதய்யரவர்கள்
11. தேவிகோட்டை சிவகாம சங்கச் சித்தாந்த போதகாசிரியர் திரு. பொ.முத்தையா பிள்ளை அவர்கள்
12. கோவிலூர் - மந்திர புரீசுர சுவாமி கோயில் தேவஸ்தானம் - ராம.சித.சிதம்பரம் செட்டியார் அவர்கள்
13. அண்ணாமலை நகர் சர்க்கரை ராமசாமிப் புலவர் அவர்கள்
14. கீழைச்சிவபுரிவாசர் யாழ்ப்பாணம் தமிழ்ப் பண்டிதர் திரு. வ.மு.இரத்தினேசுவர ஐயர் அவர்கள்
15. ஆரணி போர்டு ஹைஸ் கூல் தமிழ்ப்பண்டிதர் கருத்திட்டைக்குடி திரு. வி.சாமிநாத பிள்ளை அவர்கள்
16. கண்டனூர் திருவாளர் பண்டிதரத்நம் அவர்கள்
17. திருநெல்வேலியைச் சார்ந்த கோபால சமுத்திரம் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ் பண்டிதர் இராஜ கோட்டியப்ப பிள்ளையவர்கள்
18. பரிமணங்குடி ஸ்ரீ சண்முகநாத சுவாமி கோவில் உரிமைத் தொண்டர் திரு. மு.முத்துப்பிள்ளை அவர்கள்
19. திருவல்லிக்கேணி P. தியாகராஜ பிள்ளை அவர்கள்
20. மதுரை வீ.சி.சு.சிதம்பரம் ஓதுவார் மூர்த்தி அவர்கள்
21. விருத்தாசலம் தேவார ஆசிரியர் மு.சுப்பரமணிய முதலியார் அவர்கள்
22. திருவையாறு ஆ.வேலாயுதம் பிள்ளை அவர்கள்
23. திருநெல்வேலி தமிழிசைவாணர் S.சுந்தரமூர்த்தி ஓதுவார் அவர்கள்
24. நேமம் தேவார பாராயணம் தி.மா.சந்திர சேகர ஓதுவார் அவர்கள்
25. சிதம்பரம் தாலுகா போர்டு பிரசிடெண்டு எஸ்.வடிவேள் பிள்ளை அவர்கள்
26. கும்பகோணம் பாரத மித்திரன் பத்திராதிபர் ஆ.சக்திவேள் பிள்ளை அவர்கள்
27. புதுப்பட்டி சிவஞானம் பத்திராதிபர் கவி பாலசரஸ்வதி ந.வேற்சாமிசாத பிள்ளை அவர்கள்
28. பலவான்குடி சிவனேசன் ஆசிரியர் அவர்கள்
29. கோட்டையூர் தனவணிகன் ஆசிரியர் அவர்கள்
30. பள்ளத்தூர் நவமணி ஆசிரியர் அவர்கள்
31. செட்டிநாடு கனம் ராஜா.சர்.சா.ராம.மு.அ.அண்ணாமலை செட்டியார்

32. அமராவதிபுதூர் சிவநேசச் செல்வர் வயி.நாக.ராம. அ.வெ.வெங்கடாசலம் செட்டியார் அவர்கள்
33. அரிமளம் அ.அரு.அண்ணாமலை ஐயா அவர்கள் (மூப்பினிலிருந்து)
34. நாட்டரசன்கோட்டை சிவநேசச் செல்வர நா.அரு.நா.நாராயணன் செட்டியார் அவர்கள்
35. காரைக்குடி முத்துப்பட்டினம் சா.சு.சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்
36. திருப்பனந்தாள் S.அருணசடேச தேசிகர் அவர்கள்
37. காரைக்குடி முத்துப்பட்டினம் ராம.கு.ராம.பழனியப்ப செட்டியார் அவர்கள் (மெட்டிலாவிலிருந்து)
38. கல்லுப்பட்டி சு.நா.சு.மெ.சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் – (சிகாமெட்டிலிருந்து)
39. அமராவதிபுதூர் பிச்சப்பா சுப்பிரமணியம் அவர்கள் (ஆரோக்கியபுரமிருந்து)
40. காரைக்குடி ராம.அழகப்பச் செட்டியார் அவர்கள் (மூவாரிலிருந்து)
41. காரைக்குடி பழ.தெ.சேதுராமன் செட்டியார் அவர்கள் (கம்பாரிலிருந்து)
42. காரைக்குடி சித.இராமநாதன் செட்டியார் அவர்கள் (தோஞ்சையிலிருந்து)
43. பள்ளத்தூர் ராமநாதன் செட்டியார் அவர்கள் (கோலாலம்பூரிலிருந்து)
44. கா.முத்துப்பட்டினம் மெ.சு.மு.முத்துராமன் செட்டியார் அவர்கள் (கோலாலம்பூரிலிருந்து)
45. கா.முத்துப்பட்டினம் அரு.மெ.மெய்யப்ப செட்டியார் அவர்கள் (கோலாலம்பூரிலிருந்து)
46. கா.முத்துப்பட்டினம் மெ.நா.மெ.நாராயணன் செட்டியார் அவர்கள் (செய்கோனிலிருந்து)
47. கொக்குவில் சைவப் பிரசாரகர் த.குமார சுவாமி பிள்ளை அவர்கள்
48. ஸ்ரீ காசிஸில்க் பீதாம்பரக் கம்பெனி – பா.ஆதிமூர்த்தியவர்கள்

ஐயா அவர்களின் மாணாக்கர்கள்

49. திருவாரூர் – தி.சுந்தர தேசிகரவர்கள்

50. செங்கர்படுத்தான் காடு – செ.கோ.திருச்சிற்றம் பிள்ளையவர்கள்

51. தேவிகோட்டை சொ.வேலுச்சாமி கவிராயர் அவர்கள்

52. காரைக்குடி S.M.S. ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் ப.மாசிலாமணி தேசிகர் அவர்கள்

53. ஆத்தங்குடி சு.வீர.கதிரேசன் செட்டியார் அவர்கள்

54. கோ நகர் சு.மு.இராமசுப்பிரமணியச் செட்டியாரவர்கள்

55. காரைக்குடி ராம.உ.இராமசாமி செட்டியாரவர்கள்

56. காரைக்குடி ராம.உ.காசிவிஸ்வநாதர் செட்டியார்

57. காரைக்குடி கா.கா.அள.காளையப்ப செட்டியாரவர்கள்

58. காரைக்குடி முத்த.வெ.சொக்கலிங்கச் செட்டியார் (அரிக்கனிலிருந்து)

59. காரைக்குடி சேவு.மெ.மெய்யப்ப செட்டியாரவர்கள்

60. காரைக்குடி நப.ராம.ப.ராம.திருநாவுக்கரசு செட்டியாரவர்கள்

61. காரைக்குடி அரு.சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்




உ
சிவமயம்
ஸ்ரீ கற்பக விநாயக சகாயம்
ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை
நாட்டுக்கோட்டை நகரத்தார்.
ருதிரோற்காரி ௵ ஆவணிமீ ௭ ௨
மெய்கண்டான் ஆண்டு எா. சிதம்பரம்
22. 8. 1923.





ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை – சிதம்பரம்
ஸ்தாபனம், மெய்கண்டான் ஆண்டு 700 (22.08.1923)